மகிழ்ச்சி

சீர்திருத்த மாத இதழ்

ஆசிரியர்: நா. சதானந்தம்

விருதுநகர்.

தி. ஆ. 1983—ஆடி 1.

ஆண்டு 4] 16-7-52 [மாதம் 2

பொருளடக்கம்

நாட்டு நிலவரம் 2

திருமணம்
—ஏ. வி. பி. ஆசைத்தம்பி 4

அறிவுப் பூங்கா 8

ஆபிரகாம் லிங்கன்
—R. T. ராஜன் B. A. 9

மகிழ்ச்சிதரும்நாள் என்றோ?
—வெ. வெங்கடசாமி 11

இதுநிஜமா?—வாகன் 12

சந்தேகம் ஒழிக!—ஜாலி 13

சரடுவிடாதே!
நிமிடக்கதை—வஸந்த் 14

நேயர் தபால் 15

காதற்கடல்—தொடர்கதை
விருதை மகிழ்நன் 17

விபச்சாரியானுள்
—பழனி அ. தமிழரசு 25

நீதி எங்கே?—கடவுள் 29

அமுதா
—மதுரை மா. துரைசிங் 36

"காதல்" விமர்சனம் 41

சினிமாச் செய்திகள்—பெல் 44

ஞாபகசோதனைப்போட்டி 4 45

கதைகளில் வரும் பெயர்கள் கற்பனையே.

மங்களகரமான
சுப காரியங்களுக்கு
கொல்லம் சகோதரிகள்
T K மாலதிபாய்
குமாரி கோமதி
நாதஸ்வரக் கச்சேரி
★
விபரங்களுக்கு:
T.K. பத்மநாதபிள்ளை
5/21, பட்டித்தெரு,
விருதுநகர்.

நாட்டு நிலவரம்

அகம்பாவத்திற்கு ஆப்பு!

சென்னை மந்திரி சபையின் மீது நம்பிக்கைத் தீர்மானம் நிறைவேறி விட்டது. சாதகமாக 200 ஓட்டுகளும், எதிராக 151 ஓட்டுகளும் கிடைத்துள்ளது. இனி குறிப்பிட்ட கொஞ்ச காலத்திற்கு இப்பேர்பட்ட தீர்மானத்திற்கே வழியின்றி காரியங்களை மேற்கொள்ளலாம் மந்திரி சபையார்.

இந்த நம்பிக்கைத்தீர்மானம் கொண்டுவரவேண்டிய அவசியமும், நான்கு நாட்கள் விவாதமும், நாள் ஒன்றுக்கு சுமார் 5000 ரூபாய் வீதம் செலவு ஆகும்படி நேர்ந்ததற்கும் காரணம் என்னஎன்று ஆராய்ந்தால் எல்லாம் ஒரு நபரின் "நான்" என்ற அகங்காரவார்த்தையால் விளைந்தது தான் என்பது நன்கு விளங்கும்.

'படிப்பது இராமாயணம், இடிப்பது பெருமாள் கோவில்' என்று சொல் ஒன்றும் செயல் ஒன்றுமாகக் கூறி நடப்பவர்களைக் கூறுவார்கள். இதேபோல், மேடைகளிலும் பிற இடங்களிலும் மேற்கோள்கள் கூறுவது கீதையில்; எழுதுவதோ வியாசர் விருந்து, பஜகோவிந்தம். ஆனால் நடைமுறையில் 'நான்' என்ற அகம்பாவத்தின் அடிமை. இந்த அகம்பாவம் என்பது அறிஞர் எவராக இருந்தாலும் பற்றிக்கொள்ளும் தொத்து வியாதி போன்றது போலும். இல்லை என்றால் அண்மையில் அருப்புக்கோட்டை தொகுதியில் டெல்லி மக்கள் சபைக்காக நடைபெற்ற உபதேர்தலின்போது, காங்கிரஸ் அபேட்சகருக்காகப் பேசிய சென்னை முதல் அமைச்சர் திரு. ராஜாஜீ "நான் வேண்டுமா, வேண்டாமா?" என்று கேட்டிருப்பாரா?

சென்ற பொதுத்தேர்தலின் போது திரு. காமராஜ் அவர்களும், அவரது கோஷ்டியாரும், சென்னை அசெம்பிளிக்கும், டெல்லி பார்லிமெண்டிற்குமாக சுமார் 450 நபர்களைத் தேர்ந்தெடுத்து நிறுத்தி, படாத பாடுபட்டு பிரச்சாரங்கள் செய்து, கட்சிக்கு உள்ளும் வெளியிலுமாக பெரும் எதிர்ப்புக்கிடையில் புரண்டு, ஒரு சிறு அறிக்கை கூட காங்கிரஸ் அபேட்சகர்களுக்காக விடாது, பஜகோவிந்தம் பாடித் திரிந்த ராஜாஜீக்கு, மந்திரிசபை அமைக்கும் அளவிற்கு வெற்றியாளர்களைத் தேடித்தந்தனர்

ஆனால், இன்று அதிகார லகானைக் கைப்பற்றிய நிலையில், கட்சிக்குள் இருந்த பூசல்கள் மறைந்தது என்று கூறும் நிலையில், ஒரே இடத்

தில், ஒரே நபருக்காக நடைபெற்ற உபதேர்தலில்; மத்திய, சென்னை அரசாங்க மந்திரிகள், தலைவர்கள் இன்னோரன்ன பலர் மின்னல் பிரச்சாரம் செய்தும், கோட்டை விடுவதென்றால் இது சாதாரண விஷயமாகக் கருதமுடியுமா?

'நான்வேண்டுமா, வேண்டாமா?' என்று ஒரு ராஜ்யத்தின் முதல் மந்திரிகேட்டதும், அதற்கு மக்கள் தந்த தீர்ப்பும், மேலிடத்திற்குத் தெரியாமலா போய்விடும்? இந்தக் களங்கத்திலிருந்து தன் பெயரைக் காப்பாற்றிக்கொள்ளவே இத் தீர்மானம். போகட்டும் இனியாகிலும் மக்களிடம் இப்படி 'நான்' என்ற முறையில் விஷப்பரீக்ஷையில் இறங்கமாட்டார் என்று பூர்ணமாக நம்பலாம்.

தீமையிலும் நன்மை!

இன்றுள்ள சென்னை அரசியல் நிலவரத்தைக் காணும்போது—நம்பிக்கைத் தீர்மானம் நிறைவேறிய காரணத்தாலும், ராஜாஜீ மேற்கொள்ளும் தீவிர நடவடிக்கைகளாலும், இனி அடுத்துவரும் ஐந்து ஆண்டுகளுக்கு, அவரை அனுசரித்துச் செல்கிறவர்கள் பிரிந்து விலகுவார்கள் என்று எதிர்பார்க்க முடியாது. ஐக்கிய முன்னணியிலிருந்து விலகும் திரு. ராஜேஸ்வரன்போன்றவர்களைத்தான் காண முடியும். 'மதறாஸ் மனதே' என்று புலம்பித் திரியும் பித்தலாட்ட பிரகாசம் கோஷ்டிக்கு, ஐ.மு.வில் உள்ள எந்த் தமிழ் மகனும் தலை அசைப்பர் என்று எதிர்பார்க்க முடியாது. இதனாலும் ஐ. மு.வில் ஆந்திரர், தமிழர் அபிப்பிராயபேதம் எற்படஏதுவுண்டு.

> **எழுத்தாளர் கவனிக்கவும்!**
>
> **கவிதை, கட்டுரை, கதை அனுப்புவோர்கள் அதில் ஸ்டாம்புவைத்து அனுப்ப வேண்டாம். திரும்ப அனுப்பப்படமாட்டாது.**
>
> **[ஆ-ர்]**

எனவே ஆட்சியில் உள்ளோர், கட்சி நோக்கம் ஒன்றில் மட்டுமே கண்ணோட்டம் செலுத்தாது, ஏனைய அங்கத்தினர் கூற்றுக்களில் நியாயமும், உண்மையும் இருக்குமானால், தாராளமாக அவற்றை ஏற்று, 'பட்டகாலிலே படும், கெட்ட குடியே கெடும்' என்றபடி எற்கனவேயே வரிப்பளுவாலும், வருமானக் குறைவாலும் நொந்துபோயிருக்கும் ஏழை மக்களை மேலும் மேலும் வருத்தாது, புதிய பட்ஜெட்டில் அவர்களைப் பாதிப்பதாகக் கூறப்படுபவைகளுக்குச் செவிசாய்த்து, நம்பிக்கைத் தீர்மானத்தில் மெஜாரிட்டி சட்டசபை அங்கத்தினர்களின் வோட்டைப் பெற்றதுபோல், மக்களின் நல் வாழ்த்தைப் பெற வேண்டுகிறோம்.

அட்டைப்படம்:

நரசிம்மபாரதியும்—மாதுரிதேவியும்

திருமணம்

[ஏ. வி. பி. ஆசைத்தம்பி]

"ஆமா! நீங்க இப்படியேஇருந்தா கல்யாணி கல்யாணம் நடந்திடுமா? முயற்சி எடுத்து சொல்லிவிட்டாத் தானே அவங்களுக்கும் பிரியம் ஏற்படும்!"

"அடியே! நாம் எப்படி வலிய சொல்லிவிடுவது? அவங்களாவந்தா நாம சரி சொல்லலாம்!"

"பெரிய இடத்துச் சம்பந்தம் வேணும்னு வலியதான்போகணும்! ஜம்பமா இருந்தா நம்ப பொண்ண என்னுகூட கேட்கமாட்டாங்க"

"நீ பேசாம இருடி! தரகன் கிட்ட எல்லாம் சொல்லிவிட்டிருக் கேன். பதில் இன்னிக்கோ நாளைக் கோ வந்துடும்! கல்யாணியை அவங்களுக்கு நல்லா புடிச்சிருக்கு!"

"என்னமோ நான் சொல்றதை சொல்லிவிட்டேன்"

இந்த உரையாடல் தணிகாசலத் திற்கும் அவர் தர்மபத்தினிக்கும் நடந்தது. அவர்களுடைய ஒரே மகள் கல்யாணி இதை உற்றுக் கேட்டுக்கொண்டிருந்தாள்.

பெரிய பணக்கார வீட்டிலே தன்னைத் திருமணம்செய்துகொடுக் க, தாய் தந்தையர் முயற்சித்துவரு வதைக் கண்டு கல்யாணி சந்தோ ஷப்படவில்லை; கலங்கினாள்; கண் ணீர்விட்டாள்.

இதற்குக் காரணம் ஒருவகையில் தூரபந்துவான மனோகரனைக் கல் யாணி மனப்பூர்வமாகக் காதலித் தாள். மனோகரன் பரம ஏழை என்பதைவிட வேறெந்தக்குறையும் சொல்லமுடியாத குணவானாகஇருந் தான். ஆனால் பண உலகத்திலே குணத்தை யார் பார்க்கிறார்கள்?

கல்யாணியின் பெற்றோர்களும் இந்த உருப்படாத உலகத்தில் வாழ் பவர்கள்தானே! ஏழையிடத்திலே மகளைத்தள்ள மனம் வருமா? லட் சாதிபதிவீட்டிலே மகள் இருந்தால் வாடாமலர்போல வாழ்க்கை நடத் துவாளே என்றுதான் பெரியஇடத் துச் சம்பந்தத்திற்காகத் துடியாய்த் துடித்தார்கள்.

அந்த ஊரிலேயே பெரிய தனக் காரரான, தங்கநாதரும், தன்மகன் தனபாலனுக்குக் கல்யாணியைப் பெண்கேட்க முடிவுசெய்திருந்தார். தரகன் மூலமாகவே சொல்லி அனுப்பினார். கல்யாணி சகல லட் சணமும் பொருந்தியவளாய் இருந் ததால், அவளைத் தன் மருமகளாக எப்படியும் அடையவேண்டும் என்ப துதங்கநாதரின் திட்டமாகஇருந்தது

இதையறிந்த கல்யாணி தன் தாயிடம் கவலையைச் சொல்லிஅழு தாள்; மனக்குறைதீர, மனோகரனை மணம்புரிய மார்க்கம் செய்யும்படி மன்றாடினாள். வெட்கத்தை விட்டு அவனைக் காதலிப்பதாகவும் சொல் லிப்பார்த்தாள்.

"போயும்போயும்பிச்சைக்காரனை மணப்பதா? சீச்சீ! மானங்கெட்டவளே!" என்று கல்யாணியை அவள் பெற்றோர்கள் திட்டினார்களே தவிர, கருணைகாட்டிவிடவில்லை.

"கல்யாணி கவலைப்படாதே! ஏழைக்கு இந்த உலகம் இல்லை! கடலின் அலையும் ஏழைகளின் கவலையும் ஓயாதவை! துயரப்பட்டு என்ன செய்ய? தூய காதல் கொண்டு என்னசெய்ய? நீ பணக்காரனையே மணந்துகொள்!" என்று மனோகரனும் சொன்னான்.

"நீங்களுமா இப்படிச் சொல்கிறீர்கள்? நம் காதல் நிறைவேற வேண்டும்! நாம் வாழவேண்டும்! பணக்காரபுரியில் பாடுபடாமல் படாடோபமாக வாழ்வதைவிட, ஏழைகளாக இருந்து உழைத்து உல்லாசமாக வாழ்வோம்!" என்றாள் கல்யாணி!

மறுதினம் மனோகரனே நேரே கல்யாணி வீட்டுக்கு வந்தான். தணிகாசலத்திடம் தன் ஆசையை வெளியிட்டான். ஆனால் தணிகாசலம் ஒரேயடியாக மறுத்துவிட்டார்.

அதே சமயத்தில் கல்யாணத் தரகன் வீட்டினுள் நுழைந்து "தங்கநாதர் என்னை அனுப்பிச்சார்! நீங்கோ கல்யாணியை மாத்திரம் தங்கநாதர் ஆத்துக்கு அனுப்பிச்சா போதும்! வரதட்சிணை கிரதட்சிணை ஒரு பைசா வேண்டாம்! என்ன சொல்றேள்?" என்று கேட்டான்.

தணிகாசலம் வாயை இழித்துக்கொண்டே "அதுக்கென்ன அப்படியே செய்யலாம்! நாளையே பொருத்தம்பார்த்துட்டு முகூர்த்தம் வச்சிக்கிடலாம்" என்று தரகனிடம் சொல்லிஅனுப்பினார் தணிகாசலம். தரகன் தாங்கமுடியாத மகிழ்ச்சியில் சென்றான்; அவமானத்தோடு அங்கிருந்துஅகன்றான் மனோகரன். மறைவில் நின்ற கல்யாணி கண்ணீர் உகுத்தினாள்.

மறுநாள் ஜோஸ்யன் வந்தான். தணிகாசலம் வெற்றிலையை மடித்துக்கொண்டே "வாரும் ஓய்! உட்காரும்! நம்ப பொண்ணுக்கு கல்யாணம்! ஜாதகம் பார்க்கணும்!"

"நன்னா பார்க்கலாம்! ஜாதகத்தைக் கொடுங்கோ!"

இந்தாங்க! பொண்ணோட ஜாதகம்!"

"ஜாதகம் திவ்வியமா இருக்கு! மாப்பிள்ளை பையனோட பெயர் என்ன?"

"தனபாலன் ஓய்! தனபாலன்!"

ஜோஸ்யன் ஏதேதோ எழுதிப் பார்த்தான்; புரட்டிப் பார்த்தான்! கடைசியில் தணிகாசலத்தை நிமிர்ந்து பார்த்தான்.

"என்ன ஓய்! பார்க்கிறீர்?"

"பையனோட ஜாதகம் நன்னாயில்லையே!"

"என்ன ஓய்?! நல்லா பாரும்!"

"நன்னாதான் பார்த்தேன்! பையனோட ஜாதகத்துக்குக் கல்யாணம் செய்தா......அன்றே பெண்ணோட உயிருக்கு ஆபத்து இருக்கு!"

"என்ன ஓய் விளையாடுகிறீர்?"

"நானா சொல்றேன்? ஜாதகம் சொல்லுது!"

"சரிசரி! நீர் ஜாதகம் பார்த்தது போதும். போய்வாரும்!"

"ஏதோ சொல்லிட்டேன். அப்புறம் உங்க இஷ்டம்?" இப்படிச்

சொல்லிவிட்டு ஜோஸ்யன் சென்றுவிட்டான்.

கல்யாணியின் தாய் ஓடோடி வந்து "அப்ப இந்தக் கல்யாணம் வேண்டாம்" என்று தணிகாசலத்திடம் சொன்னுள். கல்யாணியும் பரிதாபமாக நின்ருள்.

தணிகாசலம் இதற்கெல்லாம் தாழ்ந்துவிடவில்லை. "ஜாதகமாவது! மண்ணுங்கட்டியாவது! இதெல்லாம் சுத்தப்பொய்டி! கல்யாணிக்கும் தனபாலுக்கும் கல்யாணம் நடந்தே தீரும்! ஜோஸ்யம் பொய் என்பதை நிரூபிக்கிறேன்!" என்று கர்ஜித்தார்.

எதையும் பொருட்படுத்தாமல் கல்யாணவேலை நடந்துகொண்டிருந்தது. அழைப்பிதழ்கள் அச்சிடப்பட்டன; எல்லோருக்கும் அனுப்பப்பட்டன.

மேளதாளம் முழங்க, தடபுடலாக தனபாலன் தாலி கட்ட வந்தான். மணவறையில் கல்யாணி அமர்த்தப்பட்டாள். புரோகிதர் மந்திரம் ஜெபித்தபின் தனபாலன் தாலிகட்டினுன். கொட்டுமேளம் முழங்கியது.

திடீரென்று கல்யாணி கீழே சாய்ந்தாள்! ஒரே பரபரப்பு ஏற்பட்டது. "பெண் மயங்கி விழுந்துவிட்டது" என்று கூச்சல்கேட்டது. "டாக்டரைக் கூப்பிடுங்கள்" என்று சிலர் கதறினுர்கள்.

"ஐயோ! ஜோஸ்யன் சொன்னுனே!" என்று சொல்லிக்கொண்டே மாரடித்துஅழுதாள் கல்யாணியின் தாய்!

"ஜோஸ்யம்! நிஜந்தானு? என் மகள் செத்துவிட்டாளா?" என்று தன்னை அறியாமலே தனக்குத் தானே கேட்டுக்கொண்டார் தணிகாசலம்!

அதற்குள் அங்குவந்த டாக்டர் கல்யாணியைப் பார்த்துவிட்டு...... "இறந்துவிட்டாள்! ஆனுல் மரணத்தில் சந்தேகம் இருக்கிறது!" என்று சொன்னுர்.

மரணத்தில் சந்தேகம் என்றவுடனே, பிணத்தைக் கைப்பற்ற போலீஸ்வந்தது. தணிகாசலத்தை போலீசார் விசாரித்தனர்.

"இந்தக் கல்யாணம் நடந்தால் பெண் செத்துவிடுவாள் என்று ஜாதகத்தைப்பார்த்துவிட்டு ஜோஸ்யன் சொன்னுன்" என்று தணிகாசலம் சொன்னுர்.

சந்தேகத்தின்பேரில் ஜோஸ்யனைப் போலீசார் கைது செய்து... "உண்மையைச் சொல்லாவிடில் கழுதையை அடிப்பதுபோல் அடிப்போம்" என்று மிரட்டினர்.

"ஐயோ! எனக்கு ஒன்னும் தெரியாது! கல்யாணம்நடந்தா பொண்ணு செத்துப் போவான்னு சொல்லும்படி, மனேகரன் சொன்னுன்! பணத்தாசையில சொல்லிவிட்டேன் எனக்கு வேறஒன்னும் தெரியாது!" என்று அலறிக்கொண்டே சொன்னுன் ஜோஸ்யன்!

கல்யாணியின் மரணத்திற்கு மனேகரன் காரணமாய் இருக்கலாம் என்று சந்தேகப்பட்டு அவனைக் கைது செய்ய போலீசார் விரைந்தனர்.

மனேகரன் வீடு திறந்தே கிடந்தது. மனேகரன் கட்டிலில் படுத்திருந்தான். போலீசார் முதலில் அவனைக்கூப்பிட்டனர்; மனேகரன்

எழவில்லை. தட்டி எழுப்பினர்கள்; அவன் எழவே இல்லை! மனோகரனும் இறந்துகிடந்தான்.

பக்கத்திலே ஒரு கடிதம் கிடந்தது. அதை எடுத்து போலீசார் பிரித்துப் பார்த்தனர்.

"ஏழைவாழ்வில் காதல் என்பது விஷம்! திருமணம் என்பது இரு பிணம்! இன்பம் என்பது இறப்பு!" இவைதான் கடிதத்தின் வாசகம்.

அந்த நடு இரவிலேகூட, கல்யாணியும் மனோகரும் சுடுகாட்டிலே அடுத்தடுத்துப் படுத்துக்கொண்டு, கொஞ்சமும் பயப்படாமல் அக்கினிச் ஜுவாலையாக மாறி கொஞ்சி விளையாடிக்கொண்டிருந்தார்கள்.

திருமணம்

அருப்புக்கோட்டை S. N. ராஜன் நியூஸ்மார்ட் உயர்திரு. S. N. ராஜன் அவர்கள் சகோதரி திருவளர் செல்வி கமலாவுக்கும், மதுரை உயர்திரு. வே. ஆ. ஆறுமுகம் அவர்கள் குமாரர் திருவளர் செல்வன் செல்லத்துக்கும் அருப்புக்கோட்டை பெண் இல்லத்தில், டில்லி மக்கள் சபை உறுப்பினர் உயர்திரு. M. D. ராமசாமி B. A., M. P. அவர்கள் தலைமையில், சண்முகசுந்தரம், M. S. ராமசாமி, S. S. பழனிச்சாமி, பெருமாள், T. K. சுப்பிரமணியம் ஆகியவர்களால் வாழ்த்துக் கூற, திருமணம் சிறப்பாக நடைபெற்றது. மணமக்களுக்கு நமது வாழ்த்துக்கள்.

விருதுநகர்
ஸ்ரீ ராதாவில்
மாதுரிதேவி, பி.எஸ்.கோவிந்தன், எம். ஜி. ராமச்சந்திரன் நடித்த
"என் தங்கை"
(தமிழ்)
இப்பொழுது
5-வது வாரமாக
நடைபெறுகிறது

விருதுநகர்
சென்ட்ரலில்
நம்பியார், பி. எஸ். சரோஜா, பி. எஸ். சிவபாக்கியம் நடித்த
கல்யாணி
(தமிழ்)
இப்பொழுது
4-வது வாரமாக
நடைபெறுகிறது

வாழப்பிறந்தவள்

"அதாதாசன்" ரதிப் பதிப்பகம்,
127, தெற்காவணிமூலவீதி, மதுரை.
பக்கங்கள் 59—விலை 12 அணு

வெளி அட்டைப் படத்திற்கும், உட்கருத்திற்கும் சம்பந்தம் இல்லாதிருந்தாலும், கதை நன்கு, நாட்டில் நடக்கும் கபட வேடதாரிகளின் முகமூடிகளை கிழித்துச் செல்கிறது. அருமையான கதை.

* * * *

ரகசியக்குறி, மாஜிகாவலி, பயங்கரவாதி, மாயச்சிலை

மேற்கண்ட, சிறுவர் சிறுமியர்க்கான, "டிடெக்டிவ்" எழுதிய கதைப் புத்தகங்களும், மதுரை ரதிப் பதிப்பகத்தாரிடமிருந்து வரப்பெற்றோம். கதைகள் எல்லாமே படிப்பதற்குச் சுவாரஸ்யமாகவும், விறுவிறுப்பாகவும் உள்ளன

ஒவ்வொன்றும் விலை அணு 1

* * * *

நள்ளிரவில் நடந்தது?

எழுதியது: திருமணி
மோகன் பதிப்பகம்,
32, ரட்சண்யபுரம், தூத்துக்குடி.
விலை அணு 0—0—6

சிறுவர்க்காக எழுதப்பட்ட கதை.

* * * *

சத்தியமேவ ஜெயதே அல்லது மதத்தை மறந்த பின் மனிதாபிமானம்

ஆசிரியர்: சி. எஸ். பீரான்-பிள்ளை
(வயா) மஹ்மூதுபந்தர்.
பக்கங்கள் 65 :: விலை அணு 12

மதத்தில் சிந்தனையுள்ளவர்கள் படிக்கவேண்டிய புத்தகம். மதம் பற்றி குரு, சிஷ்யன் சம்பாஷணை முறையில் கேள்விபதிலாக அமைக்கப்பெற்றுள்ளது.

* * * *

ஆலமரத்துப் பேய்

எழுதியது: ப. க. குஞ்சிதம்
தென்றல் நூற்பதிப்புக் கழகம்,
சலகண்டபுரம். (சேலம்மாவட்டம்)
பக்கங்கள் 31—விலை 2 அணு.

பேய், பிசாசு என்று இளம்குழந்தைகளின் பிஞ்சு உள்ளத்தை பாழ்படுத்தி, பயத்தைமூட்டி, கோழைகளாக்கும் கூற்றை விளக்கும் சிறுவர்க்கான அறிவுக் கதை. பெரியவர்களும் அவசியம் படிக்க வேண்டும். சிறுவர்க்கென உபயோகமற்ற மந்திரஜாலக் கதைகள் எழுதும் ஆசிரியர்கள், திருமதி ப. க. குஞ்சிதம் எழுதிய இச்சிறுகதையை முன்னிறுத்தி இதுபோன்ற சீர்திருத்தக் கதைகளை எழுதினால் நாட்டுக்கு நன்மை செய்தவர்களாவார்கள்.

அமெரிக்க அறிஞர்கள் வரிசை 2

குடியரசின் ரட்சகர்

ஆபிரகாம் லிங்கன் 1809-1865

[R. T. ராஜன் B. A.]

ஒவ்வொரு ஆண்டிலும் பிப்ரவரி 12ம்நாள் ஆபிரகாம்லிங்கன் தினமாக எல்லா அமெரிக்கராலும் உன்னதமாகக் கொண்டாடப்பட்டுவருகிறது. 16வது ஜனாதிபதியான லிங்கன் மிகப் புகழ் படைத்த அமெரிக்கத் தலைவர்களில் ஒருவராகப் போற்றப்படுவதுடன் உலகப்பெருமக்களில் ஒருவராகவும் திகழ்கிறார். ஜனநாயக வீரரான அவர் எல்லா அமெரிக்கர்மனதிலும் எக்காலத்திலும் நிரந்தர பெருமை பெற்றுவிட்டதுடன் அமெரிக்க சரித்திரத்திலும் நீங்காப் புகழ்கொண்டுள்ளார்.

ஆபிரகாம் லிங்கன், 'கெண்டக்கி' எனுமிடத்தில் ஏழைக் குடும்பத்தில் பிறந்தார். அவர் பிறந்து வளர்ந்ததெல்லாம் ஒரு சிறு மரவீட்டில்தான். பகலில் வயலில் வேலைசெய்துவிட்டு இரவில் தானகவே படித்துக்கொள்வது அவர் பழக்கம். காகிதம் கிடைக்காமல் மர மண்வெட்டியின்தகட்டில் அடுப்புக்கரியினல் எழுதி கணிதம் பயின்றார். இளமையிலேயே கல்வியில் ஆர்வமிகுந்து தானகவே ஆங்கில மொழியில் புலமையடைந்ததுடன் சட்டப்படிப்பிலும் முதன்மையாகி வக்கீல் நிபுணரானர். வக்கீல்தொழிலில் பெரும்பாலும் ஏழைகளுக்காகவே வாதாடினர்.

ஆபிரகாம் லிங்கன் வாழ்ந்த சமயம் அமெரிக்க சரித்திரத்தில் மிக முக்கியத்துவம் பெற்றது. அப்பொழுதுதான் வெளிநாட்டினர் ஆயிரக்கணக்கில் அமெரிக்காவில் வந்து குடியேறினர். தரிசாகக் கிடந்த நிலங்களெல்லாம்பயிரிடப்பட்டுச்செழித்தன. நவீன யந்திரங்களும் சாதனங்களும் புதப்புதியனவாய் தோன்றி தொழிற் புரட்சி ஏற்பட்டது. எல்லாம் யந்திரமயமாய் மாறின. ஆபிரகாம்லிங்கன் அக்காலத்திற் கேற்றவராயிருந்தார். ஏழைகளிடம் காட்டும் பரிவும், தன்னடக்கமும், புத்திதீட்சன்யமும், எதையும் முடிக்கும் திறமையும் யாவரையும் அவர்பால் அன்பு மிகச்செய்தன. அந்தக் காலத்தில் அடிமை வியாபாரம் எனும் கொடிய வழக்கம் அமெரிக்காவில் நிறைந்திருந்தது. அதாவது வியாபாரப் பண்டங்கள்மாதிரி மனிதர்களை விற்பதும் வாங்குவ

தும் பகிரங்கமாக நடைபெறும். அடிமைகளை வாங்குவோர் அவர்களை என்ன கொடுமைகள்வேண்டுமானாலும் செய்யலாம். என்னமும்எதிர்பேசவோ வெளியில் போய்விடவோ கூடாது. நாட்டின் சட்டத்தில் அடிமைகளின் துன்பங்களுக்கு நிவாரணம ஒன்றும் கிடையாது. இந்தவழக்கம் ஆபிரகாம் லிங்கனின் மனதைப் பெரிதும் புண்படுத்தியது. சிறு பிராயத்திலேயே இந்த அடிமை வியாபாரத்தை ஒழித்துக்கட்ட வேண்டுமென முடிவுசெய்திருந்தார். அச்சமயம் அமெரிக்காவில் தென் பிராந்திய மாகாணங்கள் அடிமை வியாபாரம் செழித்து நிலைக்கவேண்டுமென கூறின.

லிங்கன்தலைமையில் வடமாகாணங்கள் அதை ஒழிக்கக் கங்கணங்கள் கட்டின. இந்தநேரத்தில் ஜனாதிபதித்தேர்தல வந்தது. ஆபிரகாம் லிங்கன் வடக்கத்திய குடியரசுக் கட்சியின் சார்பில் நியமிக்கப்பட்டு தேர்தலில் வெற்றிமாலைசூடி 1860ல் ஜனாதிபதியானார். உடனே பதினொரு தென் மாகாணங்கள் கிளர்ச்சி செய்து அமெரிக்க ஐக்கியக்குடியரசிலிருந்து விலகி போர்ப் பிரகடனம் செய்தன. இப்படியாக லிங்கன் பதவியேற்றவுடன் கொடிய உள்நாட்டுயுத்தம் ஆரம்பமாகியது. போரினால் மககள் படும் துன்பங்களைக் கண்டு லிங்கன் கலங்கினார். முதலில் ஜனாதிபதியென்ற முறையில் நாட்டில் எல்லா அடிமைகளுக்கும் விடுதலைப் பிரகடனம் செய்தார். ஆனால் இதை நிறைவேற்றுவதற்கு போரில் வெற்றி அவசியமாயிருந்தது. லிங்கனின் திறமையாலும், பெருமுயற்சியாலும் அவருக்கு 'கெட்டீஸ்பர்க்' எனுமிடத்தில் மகத்தானவெற்றி கிடைத்தது. அந்த இடத்தை இரு பக்கங்களிலும் போரில் மடிந்த வீரர்களின் நினைவுச் சின்னமாக்கினார். அச்சமயம் லிங்கன் ஆற்றிய உரை இலக்கியத்தில் அழியா இடம் பெற்றிருக்கிறது. அதன் சுருக்கமாவது. "இங்கு இறந்துபட்டோரனைவரும் வீணே மடியவில்லை. கடவுள் கிருபையால் இந்த நாடு புதிய சுதந்திரத்தை நிலைநாட்டுகின்றது. மக்களுக்காக மக்களாலாகும், மக்களின் அரசாங்கம் இத்தரையிலிருந்து என்றுமே அழியாது." 1865ம் ஆண்டில லிங்கன் இரண்டாம் முறையாக ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

அவர் புகழ் எங்கும் பரவிற்று. உள்நாட்டுப் போரையும் சீக்கிரமே முடிவுக்குக் கொண்டுவந்து சமாதானத்தை நிலைநாட்டினார். அடிமை வியாபாரம அமெரிக்காவில் அறவே அகற்றப்பட்டது. போரில்தோல்வியுற்றதென்னாட்டவரை லிங்கன் மன்னித்தார். இருசாராருக்கும் திருப்தியான முறையில் சமாதானமேற்பட்டது. அவர்பெருந்

தன்மையை யாவரும்வியந்தனர். தென்னாடு, வடநாடு ஆகியஇரண்டும் லிங்கனின் முயற்சியால் இணைந்தன. அதுமுதல் இன்று வரை தங்களுக்குள் துவேஷ உணர்ச்சிகளை விடுத்து ஐக்கிய நாடாக, உலகப் பேரரசாகவிளங்கிவருகின்றது.

ஆபிரகாம் லிங்கன், இந்தச் சமாதானமேற்பட்ட சிலநாட்களிலே ஒருநாடகத்தை ரசித்துக் கொண்டிருக்கையில்பாதகனொருவனால் சுட்டுக்கொல்லப்பட்டார். அமெரிக்க மக்கள் அனைவரும் துடித்தனர். அத்துடன் உலகமே ஒரு சிறந்த மக்கள் நலனைக் காப்போனையும் தீவிர ஜனநாயக வாதியையும் இழந்தது. ஆம், நாம் அனைவரும் இச்சமயம் நம் தேசத் தலைவரான காந்திஜியை நினைக்கின்றோம். காந்திஜீ மனித உரிமைக்காக, தென் ஆப்ரிக்காவில் அனுபவித்த துன்பங்களை எத்தனை புத்தகங்களாகவும் எழுதலாம். நம்நாட்டிலும் விடுதலை வாங்கியவுடன் அவர் மக்களிடையே சகோதர உணர்ச்சி ஏற்படுத்துவதற்காக என்னென்ன கஷ்டங்கள் சகித்தார். ஆனால், அவரும், தம் வாழ்நாளெல்லாம் மனித நலனுக்கே அர்ப்பணித்த அண்ணலாகிய அவரும் தன் நாட்டவனொருவனால் பகிரங்கமாக சுட்டுக் கொல்லப்பட்டார். இதுதான் காலத்தின் கோலம்போலும்.

★

மகிழ்ச்சிதரும் நாள்என்றோ?

பார்வாழ்வோர் பசிபோக்க
ஏர்பிடித்து உழைப்பவனின்
சோர்வுற்ற வாழ்க்கையினை
சீர்படுத்தும் நாள்என்றோ?

அல்லலுற்று அடிமைகளாய்
ஆலைகளில் வேலைசெய்யும்
தொல்லைபடு தொழிலாளர்
நலம்காணும் நாள்என்றோ?

வேலையில்லா ஏக்கத்துடன்
வேறுஎதும் புகலின்றி
ஏழைபட்டு இரந்துண்ணும்
இழிவுநீங்கும் நாள்என்றோ?

மதியிழக்கச் செய்வதுடன்
மடமைகளை வளர்த்துவரும்
சதிகார ருருவாக்கிய
மதச்சிறையைத் தகர்ப்ப [தென்றோ

வடவருக்குள் சிக்குண்டு
வதையுறும்நம் தமிழகத்தை
விடுவித்து மலர்விக்கும்
மகிழ்ச்சிதரும் நாள்என்றோ?

—வெ. வெங்கடசாமி

இது நிஜமா?

[வாகன்]

சுதந்திரம்

பட்டம் பரவசமாகப் பறப்பது கயிற்றைப் பற்றியிருக்கிறவனைப் பொறுத்தது. கணவனின் போக்கைப் பொறுத்தது பெண் சுதந்திரம்.

—ஒரு பட்டம் விடுபவன்

விளைச்சல்

விதையைமட்டும் பொறுத்ததல்ல விளைச்சல். நிலத்தின் பண்பைப் பொறுத்ததும்கூட. பெண்ணின் பெருமையைப் பொறுத்தது நாட்டின் நலம்.

—ஒரு விவசாயி

காவல்

விளைச்சல் சேதப்படாமல் தடுக்கவே வேலிகள் அமைக்கப் படுகின்றன. பெண்ணின் பண்பைப் பாதுகாத்து பெருமைப் படுத்தவேண்டியவன் கணவன்.

—ஒரு தோட்டக் காவலாளன்.

மதிப்பு

கெடிகாரத்தைப் பாருங்கள்! பெரியமுள்—ஆண்; சிறியமுள்—பெண் முயல்போல் ஓடுகிறது பெரியமுள்; நத்தைபோல் நகருகிறது சிறியமுள். என்ன இருந்தாலும் மதிப்பிற்குரியது சிறியமுள்—மணி என்னவென்று தான்கேட்கப்படுகிறது. மனைவியைப் பொறுத்தது கணவனின் மதிப்பு.

—ஒரு கடிகார ரிப்பேரர்

ஒற்றுமை

ரயில் வண்டித் தொடருக்கும் கைகாட்டிக்கும்உள்ள தொடர்பு போல சதிபதி. கைகாட்டியை கவனியாது விடப்படுகிற ரெயில் வண்டி விபத்துக்குள்ளாகும். சதிபதி ஒற்றுமைக் குறைவால் வாழ்வு வீணாகும்.

—ஒரு ரயில் பாயிண்ட்ஸ்மேன்

பூ உலகில் புகழ்பெற்ற
பூ மார்க் பீடி

தயாரிப்பவர்
ஏ.S.முத்தையா & பிரதர்.
மைலாபூர்.

சந்தேகம் ஒழிக!

"ஜாலி"

நான் ஒரு பெண்ணைக் காதலிக்கிறேன். அதற்கு என் பெற்றோர்கள் தடைசெய்கிறார்கள். இதற்கு என்ன வழி? பெற்றோர்களின் சொல்லைக் கேட்பதா? காதலியின் சொல்லைக் கேட்பதா?

—கணேசன், ஊட்டி.

உமது காதலியைக் கல்யாணம் செய்துகொண்டு, சுய முயற்சியால் உழைத்து குடும்ப நிர்வாகத்தை நிச்சயம நல்ல நிலைமையில் நடத்த உம்மால் முடியுமென்ற மனத்திண்மை இருந்தால்மட்டும் உமது காதலி சொல் கேளும். இல்லையெனில் ஒரு பெண்ணின் வாழ்க்கையைப் பாழ்படுத்த வேண்டாம். காதல் காதலாகவே இருக்கட்டும். உமது பெற்றோர் சொல்படி நடந்துகொள்ளுங்கள்.

காண்பதெல்லாம் தொழிலாளி செய்தான் என முரசொலிக்கிறார் புரட்சிக்கவி பாரதிதாசன். சுதந்திரம் எனக் கூறும் இன்றே ஏழ்மை, சாவு நிலைதான் தாண்டவமாடுகிறது. தொழிலாளர் அரசு ஏற்பட்டால் நல்ல சுபிட்சம் வருமா? வராதா?

—டி. செல்வரத்தினம்,
தூத்துக்குடி.

தொழிலாளர் ஆட்சி இல்லாவிட்டாலும், தொழிலாளர் நிலை உயர்வுக்காக உண்மையாகப் பாடுபடும் நேர்மையாளர்கள் ஆட்சி வந்தால் ஓரளவு நிவர்த்தியாகலாம்.

நான் மோட்டார் டிரைவர் கோர்ஸ் படிக்கலாம்என்று நினைக்கிறேன். இது எங்கேபடிக்கிறது?

—கா. ராமர்,
முத்துலிங்காபுரம்.

டிரைவர் கோர்ஸ்க்கென்று தனியாகப் போதிக்கும் நிலையம் இருப்பதாகத் தெரியவில்லை. அப்படியே இருந்தாலும் அங்கு 6 மாதம் அல்லது ஒரு வருடம் படித்துப் பொழுதையும், பணத்தையும் விரையமாக்குவதைவிட, மதுரைபோன்ற நகரங்களில் டிரைவிங் சொல்லிக்கொடுப்பதற்கென்றே சிலர் காருடன் இருப்பார்கள். அவர்களை விசாரித்து அவர்களிடம் ஒருமாதத்தில் உமது விருப்பத்தைப் பூர்த்திசெய்துகொள்ளலாம்.

கணிதப் பேராசிரியரும், ஆங்கிலப் பேராசிரியையும் விவாகம் செய்துகொண்டால் அவர்களுக்குப் பிறக்கும் குழந்தை எந்தப் பாடத்தில் சிறந்து விளங்கும்?

—'ஏபி'—காந்தல், ஊட்டி.

ஒன்றுமே படிக்காத பெற்றோர்களின் பிள்ளைகள் பலர் சகல பாடங்களிலும் வல்லுணர்களாக விளங்குகின்றனரே! எனவே இது மூளையின் அமைப்பையும், சூழ்நிலையையும் பொறுத்தது. மேலும் படித்தவர்களில் அநேகர் பிள்ளை பெறுவதை விரும்புவதில்லையே!

நிமிடக் கதை — சரடு விடாதே!

"சார், மணி என்ன ஆகுதுங்க"

"பத்தரை"

"நமக்கு எந்த ஊருங்க"

"கள்ளிக்குடி. ஏன் என்ன விஷயம்?"

"சும்மா கேட்டேன். நமக்குத் திண்டுக்கல். மழை தண்ணீரெல்லாம் எப்படிங்க உங்கபக்கம்"

"மழையா? யாரையாவது கொடும்பாவிகட்டி இழுத்துப் பார்க்கனும்என்று பேசிக்கொண்டார்கள். உங்கள் ஊரில்?"

"மலைதான் இருக்கிறது" இப்படிப் பதில் கூறிக்கொண்டே வந்தவன் திடீரென்று கீழே குனிந்து ஒரு பொட்டலத்தை எடுத்தான். "இது என்ன சார் நடுரோட்டில் கிடக்கிறது" என்று கூறிக்கொண்டே உடன்வரும் ஆசாமிக்குத் தெரியும்படி பிரித்தான். திடுக்கிட்டுவிட்டனர் இருவரும்.

"சார் தங்க மைனர் செயின்" என்று பரபரப்புடன் கூறி இருபுறமும் வேறுயாரும் பார்க்கிறார்களா என்று பார்த்துக்கொண்டான். அப்படியே இருவரும் தெருவின் ஒரு ஓரமாக ஒதுங்கினார்கள்.

"சார் நாம் இருவரும் சேர்ந்து வரும்போதுகிடைத்தது. எனவே நான்தானே எடுத்தேன் என்று எனக்கே சொந்தமாக்கிக்கொள்ள விரும்பவில்லை. இருவருமேபகிர்ந்து கொள்வோம். இதோ இத்துடன் இது வாங்கியபில்லும் இருக்கிறது" என்று கூறி அதிலிருந்த பில்லைக் காட்டினான். அதில் ரூ. 110—8—9 என்று விலை போட்டிருந்தது.

"சார், நான் ஏழை. இதைக் கொண்டுபோய் பெண்ணுக்குப் போட சக்தி இல்லை. நீங்களே எடுத்துக்கொள்ளுங்கள். பாதிரூபா கொடுத்துவிடுங்கள். அல்லதுகாசிக் கடைக்குப்போய் விற்று பகிர்ந்து கொள்வோம்" என்றார் திண்டுக் கல்லார்

செயினின்ஜொலிப்பு கண்ணையும் கருத்தையும்கலக்கியது கள்ளிக்குடியாருக்கு. எப்படியாவது தான்பெற்றுக்கொள்ளவேண்டுமென்று முடிவு செய்துகொண்டு, "என் கையில் அவ்வளவு ரூபாய் இல்லை. சாமான் வாங்கக் கொண்டுவந்த 42 ரூபாய் தான் இருக்கிறது" என்றார்.

சிறிது நேர வாதத்திற்குப்பின் நாற்பது ரூபாயை மட்டும் பெற்றுக் கொண்டு, செயினைக் கொடுத்துவிட்டு அன்னியோன்னியமாகப்பழகியவர்கள்பிரிவதுபோல்பிரிந்தனர். கள்ளிக்குடியாருக்குக் கனகுஷி, 110ரூபாய் பெருமானதை 40க்குத் தட்டிவிட்டோம் என்று. நேரே காசிக்கடைக்குச் சென்றார், எவ்வளவு நிறை இருக்கிறது என்று பார்க்க. கடைக்காரர் அதைக் கையில் வாங்கிப் பார்த்தவர், அப்படியே நடுரோட்டில் தூக்கிஎறிந்து விட்டார். கள்ளிக்குடியாருக்கு ஒன்றும் புரியவில்லை. விழித்தார். "ஆளைப்பாரு! நான்கணு பெறாத ஐம்பொன் சரடைக் கொண்டுவந்து சரடுவிடவா பார்க்கிறே" என்று கத்தினார் கடைக்காரர்.

நேயர் தபால்

[உங்கள் விருப்பத்தை இப்பகுதியில் ஒரு கார்டில் எழுதி அனுப்பித் தெரிவிக்கலாம்.]

ஆசிரியர் அவர்கட்கு வணக்கம் பல. அய்யா! தமது ஆனி இதழில் "நான்காம் ஆண்டு" தலையங்கத்தில் "மகிழ்ச்சி"யில் சாதிப் பெயர்கள் குறிப்பிட்டுக் கதைஎழுதிப் பிரசுரிப் பதில்லை என்று கூறுகிறீர்கள், வர வேற்கத்தகுந்ததுவே. ஆனால் இன் றைய சமுதாயத்தில் சாதியை அற வே ஒழிக்க எந்த இயக்கமும் செய லளவில் செய்துகாட்டியதில்லையே! திராவிட இயக்கத்தார்கூட முதலி யாருக்கும் பிள்ளைக்கும், நாயக்கருக் கும் நாயுடுவிற்கும்—இவைபோன்ற சீர் திருத்தத் திருமணங்கள்தான் நடத்தியிருக்கிறார்களேயொழிய ஓர் ஆதித்திராவிடனுக்கும் நாயக்க பெண்ணுக்கோ, முதலியார் பெண் ணுக்கோ, நாடார் பெண்ணுக்கோ இதுவரை திருமணம் நடத்தியதாக தெரியவில்லையே! கலப்பு மணம் என்றால் அர்த்தம் என்ன? ஒன்றே குலம் ஒருவனே தேவன் எனபதில் அர்த்தம் என்ன? சொல்லிற்கும் செயலிற்கும் எவ்வகையில் பொருத் தம் இருக்கிறது?

—ப.மு. மாணிக்கம், கொழும்பு.

[பரம்பரையாக வந்த மனப்பான் மையை மாற்றுவதென்பது அவ்வ ளவு எளிதில் முடியக்கூடிய காரிய மல்ல. சொல்லிற்கும் செயலிற்கும் தொடர்பின்றி தலைவர்களும், பிற ரும் நடப்பதாலேயே ஜாதி ஒழிப்பு வேலையை அடிப்படையிலிருந்துநம் 'மகிழ்ச்சி' செய்துவருகிறது. ஆ-ர்]

ஆசிரியர் அவர்களுக்கு வணக்கம் பல "மகிழ்ச்சி" தமது நான்காம் ஆண்டின் முதற்படிக்கட்டிலே கால் வைத்திருக்கும் செய்திகண்டு மகிழ் வெய்துகிறேன்.

எழ்மையும், வறுமையும், அறியா மையும், அர்த்தமற்ற பல மூடப் பழக்கவழக்கங்களையுங்கொண்டிலங் கும் நந்தமிழ்நாட்டிலே நல்லதொரு பகுத்தறிவுப் போதகனாய் மகிழ்ச்சி திகழும் என்பதில் ஐயமில்லை.

காலமாறுதலையொட்டி அவ்வப் போது "மகிழ்ச்சி" புதியனவும் புதுமையானதுமான பகுதிகளையும், தலைப்புகளையும் தாங்கி மகிழ்வித்தி ருக்கிறது. மகிழ்ச்சியின்வளர்ச்சிக்கு இதுவே தலையாயது எனலாம். மேலும் அதன் மூலக்கொள்கையை இடைவிடாது எவ்வித இடரினும் நிலைநாட்டப் பின்வாங்காது என்ப தொன்றே அதன் சிறப்புக்குச் சான்று. ஆயினும் திங்கள் ஒரு முறையே வந்து தம்ஒளிமுகத்தைக் காட்டும் மகிழ்ச்சி திங்கள் இரு முறையாக வளரும் நாளை விரை வில் எதிர்பார்க்கிறேன்.

மகிழ்ச்சி தளர்ச்சியின்றி வளர்ச்சி யுற்று, இன உணர்ச்சியற்று இரு ளிலே உழலும் மக்களுக்கு வாழ் வொளியாக மேலும் ஓங்க வாழ்க! வாழ்கவென வாழ்த்துகிறேன்.

—ஜி. அய்யாதுரை, திருச்சி.

விருதுநகர் நியூ முத்துவில்

நாகேந்திரராவ், எம். கே. ராதா, ஸ்ரீராம், கண்ணாம்பா, சுந்தரிபாய், வனஜா நடித்த

ஜெமினியின்

மூன்று பிள்ளைகள்

11—7—52 வெள்ளி முதல்
வெற்றிகரமாக நடைபெறுகிறது

காதற்கடல்

தொடர்கதை — விருதை மகிழ்நன்

முன் கதைச் சுருக்கம்

வக்கீல் அரியநாதர் மகன் சேகரும், சம்பந்தர் மகன் ஜெகதீசும் நெருங்கிய கல்லூரி நண்பர்கள். அதேபோல் சேகர் தங்கை சரோஜாவும், ஜெகதீஸ் தங்கை சாருபிணியும் இணைபிரியா பள்ளித் தோழிகள். நால்வரையும் ஒருவிதப் பாசம் பின்னிப் படர்கிறது. எம். ஏ. பாஸ் செய்த சேகர் ஐ. சி. எஸ். படிக்க லண்டன் செல்கிறான். ஜெகதீஸ் வேலைக்காக அலைகிறான். இந்நிலையில் இரண்டாவது உலக மகா யுத்தம் 1939ல் ஆரம்பமாகிறது. சரியான வேலை கிடைக்காத ஜெகதீஸ் ஒருநாள் வீட்டிற்கு வராமல் மறைந்துவிடுகிறான்.

சிற்றன்னை காமுவின் கொடுமைக்குள்ளான சரோஜா, முன்பின் தெரியாத ஒருவனுக்கு, சிற்றன்னையின் தூண்டுதலால் விவாகம் செய்ய நிச்சயிக்கப்படவே வாழ்க்கையில் வெறுப்புக்கொள்கிறாள். தன் அண்ணனின் மறைவிற்குப்பின் டிரெயினிங் முடித்த சாரு, சென்னையில் உபாத்தினியாக வேலைபார்த்துவருகிறாள், தன் தந்தையுடன். எதிர்பாராதவிதமாக அவள் அண்ணனிடமிருந்து ஒரு கடிதம் வருகிறது. அதில் அவன் பட்டாளத்தில் சேர்ந்து, ஈஜிப்த் முனையில் உயர்ந்த பதவியில் இருப்பதாகவும், மேலும் விரைவில் பர்மா முனைக்கு மாற்றப்படலாம் என்றும் எழுதியிருந்தான்.

லண்டனில் சேகருக்கு ரோஸ் என்ற நங்கையின் சிநேகிதம் ஏற்படுகிறது. தன் தங்கையின் கல்யாண கண்ணீர் கடிதம் கிடைத்து துடித்துக்கொண்டிருக்கும்போது, யுத்த நெருக்கடி காரணமாக, பட்டாளத்தில் கட்டாயம் சேரவேண்டுமென்ற அரசாங்க கட்டளை வருகிறது. 'பிறந்த நாட்டிற்கே என்பணி, பிறநாட்டுக்கல்ல' என்று மறுத்து நாடு திரும்புகிறான். வழியில் விமானம் எதிரிகளால் சுட்டு வீழ்த்தப்படுகிறது. எதிர்பாராதவிதமாக காப்பாற்றப்பட்டு வீடுதிரும்புகிறான்.

கல்யாணம் முடிந்த அன்று மாலை, காக்கைவலிப்பு காரண மாக தவறுதலாக கிணற்றில் விழுந்து மணமகன் மாண்டதின் நிமித்தம் தன் தங்கை சரோஜா விதவைக் கோலமாக்கப்பட்டிருப் பது கண்ட சேகர் இரத்தக்கண்ணீர் வடித்து, தன் சகோதரிக்கு மறுமணம் செய்விக்க வேண்டுகிறான் தந்தையிடம். அவர் மறுக்கவே அவளையும் கூட்டிக்கொண்டு சென்னை சென்று, அவ ளைக் கலாமன்றத்தில் சேர்த்துவிடுகிறான்.

யுத்தத்தின் காரணமாக நாடெங்கும் இருட்டடிப்பு. கடற் கரையில் மாலை 6 மணிக்குமேல் ஆள் நடமாட்டத் தடைஉத்தரவு. ஆனால் சிந்தனை வயப்பட்ட சேகர், நீண்டநேரம் இருந்துவிடவே கைது செய்யப்படுகிறான். அவன் அருகில் மிதந்து வந்து கிடந்த ஒரு வஸ்து அவனை ஐந்தாம்படைக்காரனுக்குகிறது. ஜெயிலுக் குள் தள்ளப்படுகிறான்.

சேகரின் புகைப்படத்தை வைத்துப் பார்த்துக்கொண் டிருந்த சாரு, சந்தர்ப்பவசத்தால் சி. ஐ டி. கண்ணில் சிக்கி ஜெயிலை அடைகிறாள். அங்கே சேகரைச் சந்தித்து சரோஜாவின் இருப்பிடம் அறிகிறாள். பின் கண்காணிப்பில் விடுதலை அடைந்து சரோஜாவை ரகசியமாகச் சந்தித்து அவளது அண்ணன் நிலை கூறு கிறாள். அத்துடன் அவளையும் போலீஸார் தேடித்திரிவதையும் அறிவிக்கிறாள். தன் அண்ணன் ஜெகதீஸ் பர்மா முனை பட்டா ளத்தில் இருக்கலாம் என்றும் கூறிவிடுகிறாள். தன் ஆபத்துநிலையை அறிந்த சரோஜ் தன் வாழ்க்கைப்படலம் துக்ககரமாக தொடர்கதை போன்று செல்வதை எண்ணி, ஒருநாள் கலாமன்றத்திலிருந்து ஓடிவிடுகிறாள்.

பர்மா முனையில், ஜெகதீஸ் தலைமையிலிருந்த நேசநாட்டி னர் டிவிஷன் ஒன்று இந்திய தேசீய ராணுவத்தினரால் சுற்றி வளைக்கப்பட்டு ஜெகதீஸ் கைதியாகி, பலத்த காயத்தின் காரணமாக சிகிச்சைபெற்று வருகிறான் இதேபோல் கைதுசெய் யப்பட்டு வந்த நேசநாட்டு செஞ்சிலுவைப் படையினரில் நர்ஸ் லில்லி ஜெகதீஸைக் கண்ணும் கருத்துமாக கண்காணித்து, குண மாக்க முற்படுகிறாள். அவள் சாருபிணி, சரோஜாவுடன் படித்த மாணவி, தோழி எனக் கேட்டு பெருமிதம் கொள்கிறான். அவள்மூலம் சரோஜாவின் சோகக் கதை கேட்டு வருந்தியதுடன், நாடு திரும்பினால் விதவை சரோஜாவையே மணக்க முடிவு செய் கிறான். அவன்மீது உயிராக இருந்த லில்லிக்கு ஏமாற்றமும், அதே நேரம் பெருமகிழ்ச்சியும் பிறக்கிறது. இந்நிலையில் ரகசிய

குறிப்பு ஒன்று வில்லிக்கு வருகிறது. அவள் ஜெகதீஸைப் பிரிய மனமின்றி கூட அழைக்கிறாள் பின்வாங்கும் பட்டாளத்துடன் ஓட. அவன் மறுத்ததுடன், அவள் ஏதோ கபட நாடகம் நடிப்பதாக எண்ணி, அவளை நிந்திக்கிறான். ஆத்திரம் கொண்ட வில்லி, கழுத்தில் மாட்டி இருந்த டாலருடன்கூடிய கொடியை அத்து அவன்மீது வீசிவிட்டுச் செல்கிறாள். டாலரைத் திறந்து பார்த்த ஜெகதீஸ், அலறிக்கொண்டு அவள்ஓடியதிசையைநோக்கி ஓடுகிறான்

வக்கீல் அரியநாதரின் இரண்டாவது மனைவி காமு, தனது ஒரே மகள் சுந்தரிக்குச் சிறுவயதிலேயே கல்யாணம் செய்ததின் காரணமாக மறுஆண்டு பிரசவத்தின்போது இறந்துவிடவே, காமு மனமாற்றமுற்று சரோஜாவையும், சேகரையும் எப்படியும் வீடு கொண்டுவந்து சேர்க்கவேண்டுமென்கிறாள்.

உபாத்தினித் தொழிலில் இருந்த சாரு, பலவரன்களைத் தடுத்து, தன் அண்ணன் வந்தபின்தான் கல்யாணம் செய்துகொள் வேன் என்று கூறிவிடுகிறாள். எதிர்பாராதவிதமாக ஒரு தபால் வருகிறது அவளுக்கு. அதைப் பிரித்தபொழுது ஆரம்பமே மெய் சிலிர்க்க வைத்தது. (மேலே படியுங்கள்)

30வது அத்தியாயம்

சண்டாளன் யார்?

அறைக்குள்சென்ற சாருபிணி நீண்டநேரம் வெளிவராதிருக்கவே அவளது தந்தை சம்பந்தருக்கு என்னவோபோலிருந்தது. மெதுவாக அவள் அறை அண்டை சென்று 'சாரு சாரு' என்று இரண்டு முறை கூப்பிட்டார். பதில் இல்லை. பின் இலேசாக இரண்டு விரல்களால் கதவைக் கொட்டினார். அப்பொழுதும் பதில்இல்லை. கிழவரின் மனதில் திகில் உண்டாகிவிட்டது. அவர் அறிய இவ்விதம் ஒருநாள்கூட நடந்ததில்லை. சிலநாட்களாகவே அவளது முகத்தைக் கவனித்து வந்த சம்பந்தருக்கு, ஏதோவிபரீதம் நடந்துவிட்டதோ என்ற எண்ணம்கூட தோன்றியது. பலமாக கதவைத் 'தட தட'வென இடித்தார்.

இவ்வளவு நேரமும் ஏதோ சொப்பன உலகத்தில் மிதப்பது போன்ற உணர்வுடன் படுத்திருந்த சாரு, திடுக்கிட்டு எழுந்தாள். கையிலிருந்த கடிதம் கனவைக் கலைத்தது. பரபரப்புடன் எழுந்து ஓடி கதவைத் திறந்தாள். தந்தை நிற்பதைக் கண்டதும் அவளால் பொங்கி வரும் துக்கத்தை அடக்க முடியாது அப்படியே அவர்மீது சாய்ந்து விம்மிவிம்மி அழுதாள்.

ஒன்றும் புரியாதவராக சம்பந்தர் திகைத்தார். "சாரு! என்ன

நடந்தது ஏன் இப்படி அழுகிருய். தபால் யாரிடமிருந்து வந்தது. அண்ணுவிற்கு ஏதாவது''

அவள் அவர் வாயைத் தன் கையால்பொத்தினுள். ''அப்பா......'' அவளால் மேற்கொண்டு எதுவும் பேசமுடியவில்லை. கைகள் 'கிடுகிடு'வென நடுங்க, காகிதத்தை அவரிடம் நீட்டினுள். அதை வாங்கிய சம்பந்தர், தன் மகளை அப்படியே அணைத்து நடந்தபடியே மேஜை அருகில் சென்று, விளக்கின் சுச்சைப் போட்டார். அங்கிருந்த இருள் அகன்றது. ஆனல் சாருவின் இருதயத்தைக் கவ்வியிருந்தமன விருள் அதிகமாகி, அழுகையுடன் அவளது தகப்பனுரை இறுக இருகைகளாலும் சுற்றிக் கொண்டாள். இருந்தும் அவள் உடம்பு நடுக்கத்தால் ஆடிக் கொண்டுதான் இருந்தது. சம்பந்தர்விளக்கின் அருகில்சென்று தபாலைப் படித்தார்.

''என் இச்சைக்கிசைந்த பச்சைக்கிளியே சாரு! நீண்டநாட்களாகவே உனக்குக் கடிதம் எழுத வேண்டுமென்று அவா. சந்தர்ப்பமும், சூழ்நிலையும் ஒத்துவரவில்லை. சதா உன் நினைவால் வாடுகிறேன். உன் ஞாபகம் வந்துவிட்டால் பின் ஒரு வேலையும ஓடவில்லை எவ்வளவு தான் என் மனதைக் கட்டுப் படுத்தமுயன்ருலும்முடியவில்லை எனவே வேலைகளை அப்படி அப்படியே போட்டுவிட்டு உன்னைக் காண வந்துவிடுவேன். இதற்குள் அநேகமாக என்னை யார் என்று புரிந்துகொண்டிருப்பாய் என்று நம்புகிறேன். உன்னுடன் தனித்துப் பேசவேண்டுமென்ற அவாவால் நாள்தவருது உன்னைச்சந்திக்கவேவருகிறேன். இருந்தும் சந்தர்ப்பம் இடம் கொடுக்கவில்லை. நீட்டி எழுதிக் கொண்டே போக மனமில்லை. என்மனம்போல் நடந்தால், இந்திர போகத்தில் உன்னை இருத்துவேன். இல்லையேல் ஊர்சிரிக்க வைத்துவிடவும் அஞ்சமாட்டேன் நீ கெட்டிக்காரப் பெண். அவ்வளவுதூரம் போகவிடமாட்டாய் என்பது எனக்கு நன்குதெரியும். எங்கே என் எண்ணத்தை ஒப்புக்கொண்டதற்கு அடையாளமாக, நாளை உன்னைக் காணும் போது புன்முறுவல் ஒன்று சிந்தவேண்டும். என்னை ஏமாற்ற மாட்டாய் அல்லவா கண்ணே! உன்னையேவிரும்புகிறேன், உன் பதில் கடிதத்தை அல்ல. ஆகையால் என் விலாசத்தைக் குறிக்கவில்லை. நாளை மறந்துவிட வேண்டாம். எண்ணற்ற முத்தங்களுடன் இக்கடிதத்தை முடிக்கிறேன்''

இப்படி, பெற்றபெண்ணுக்கு வந்தகடிதத்தைப் படித்துமுடித்த பெற்றவனின் மனம் எப்படி இருக்கும்? கோபக்கனல் கொந்தளித்தெழுந்தது. ஆத்திரம் நேத்திரத்தை மறைத்தது. இரு கைகளாலும் சாருவின் தலை

மயிரைப்பற்றி "சாரு........." என்று ஆங்காரத்துடன் கூறி அவள்முகத்தை தன்முகத்திற்கு எதிராக உயர்த்தினர். அவருடைய முகம் கொலைகாரனை ஞாபகமூட்டுவதாக இருந்தது. இதைக் கண்ட சாரு பெரும் கலக்கம்கொண்டு "அப்பா......" என்ருள்.

"அப்பா இருக்கட்டும் அப்பா! அந்த அயோக்கியன் யார்? முதலில் அதைக்கூறு"

"அப்பா, உங்கள்மீது ஆணை இட்டுக் கூறுகிறேன். அவன் யாரென்று எனக்குத்தெரியாது" கண்ணீர் கலகலவென்று ஓட ஏங்கிஏங்கி அழுதவாறுகூறினுள்.

சம்பந்தரின் கைகள் பிடியைத் தளர்த்தின. தன் மகள் தவருக நடந்திருப்பின் கடிதத்தைமறைக்காது, தன்னிடம் தருவாளா என்ற எண்ணம் வந்தபோது அவர், சற்றுமுன் தான் நடந்துகொண்டதைநினைத்துநடுங்கினர். அப்படியே மகளைத் தன்தோள் மீது சாயவைத்து, சிந்தனையில் ஆழ்ந்து அவள் முதுகைத் தடவிக்கொடுத்தார்.

"சாரு! உனக்கு யார்மீதாவது சந்தேகம் தோன்றுகிறதாம்மா? இதையாரெழுதியிருப்பார்கள்?"

இந்தக்கேள்விகள் சாருவிற்கு திகிலைத்தான் உண்டாக்கியது. யாரைக் கூறுவது? குறிப்பிட்டுக் கூறும்படி யார் இருக்கிருர்கள்? தெருக்கோடி வெற்றிலை பாக்குக் கடையில் நின்று தன்னைக் கவனித்துவரும் நபர்தான் சந்தேகத்திற்கிடமாக அவள் கண்முன் தோன்றினுன். ஆனல் அதையும் திட்டவட்டமாகக்கூற மனம் துணியவில்லை. இருந்தாலும், "அப்பா! நான் பள்ளிக்குப்போகையில் ஒரு வெற்றிலைக் கடையில் ஒருவன்நின்று அடிக்கடி ஒருமாதிரியாகப் பார்த்து வருகிருன். இதை முன்பே உங்களிடம் கூறவேண்டுமென்று நினைத்தேன். ஆனல் பயமாக இருந்தது அவன்தான் செய்திருப்பான் என்று பூர்ணமாகக் கூறவும் முடியாது" என்று பதட்டத்துடன் சொன்னுள்.

'அப்படியா? முன்பேசொல்லியிருந்தால் நன்ருகஇருந்திருக்கும். அலட்சியமாக இருந்ததனல் எவ்வளவு தூரம் கொண்டு வந்துவிட்டது பார்த்தாயா? இருக்கட்டும், எல்லாம் நாளைக் காலையில் கவனிப்போம். போய் சாப்பாடு போடு. நான் கை கால்களைக் கழுவிக்கொண்டு வருகிறேன்" என்று தன் மகளைச் சமாதானம்செய்து அனுப்பினர் சம்பந்தர்.

31வது அத்தியாயம்
போலீஸ் கம்ளைண்டு!

இரவு பூராவும் சிந்தனையால் சாரு நீண்டநேரம்கண்ணயராது குழம்பிய மனதுடன் படுக்கையில் புரண்டு புரண்டு கிடந்தாள். இறுதியாக வெகு நேரத்திற்குப்

புறம் கண்ணயர்ந்தாள். எனவே காலையில் வெகுநேரத்திற்குப்பின் சம்பந்தர் வந்து எழுப்பிய பின் தான் எழுந்து, காலை ஆகாராதிகளைத் தயார் செய்ய முற்பட்டாள். முதல்நாள் சம்பவம் இடைஇடையே மனக்கண்முன் தோன்றி வேலைகளைத் தடை செய்யத்தான் செய்தன. சம்பந்தர் காலை ஆகாரம் உட்கொள்ள வந்து அமர்ந்தார். சாருவும் உடன் உட்கார்ந்து அவருக்கு வேண்டியதைப் பரிமாறிக்கொண்டே, தானும் உட்கொள்ள முற்பட்டாள்.

"சாரு! இரவெல்லாம் அந்த தபால்விஷயமாக இன்று என்ன செய்வதென்ற சிந்தனையால் தூக்கம்கூட சரியாக வரவில்லை. இறுதியாக ஒருமுடிவு செய்தும் விட்டேன்!"

"என்னப்பாமுடிவு செய்துள்ளீர்கள். எதுவும் விபரீதமாக நடந்துவிடக்கூடாதப்பா" என்றாள் ஒருவித திகிலுடன்.

"வேறு ஒன்றுமில்லையம்மா. இந்த மொட்டை லட்டர் எழுதும் புண்ணியாத்துமா — முதுகெலும்பில்லா ஜந்து—சமூக விரோதி—யார்என்று அறியவும், அதேசமயம் நமக்கு எதுவும் கெட்டபெயர் ஏற்படாமல் தடுத்துக்கொள்ளவும் முன்ஜாக்கிரதையாக, போலீஸில்கொண்டு இந்த லட்டரைத் தாக்கல்செய்துவைப்பது நல்லதென்று முடிவு செய்தேன். பிறகு மற்றொரு யோசனையும் உண்டானது அதாவது இப்படி பெண்கள் பள்ளிக்குப் போகும் பாதைகளில் நின்று குற்றமற்ற பெண்களைக் கெடுத்துத் திரியும் சண்டாளர்களை சந்திக்கிழுக்க—அவர்கள்கொட்டத்தை ஒழிக்க—உங்கள் ஸ்கூல் மானேஜிங் போர்டு மூலம் போலீஸ் கம்பிளேண்டு செய்யலாம் என்றும் தோன்றியது. உன் அபிப்பிராயம் என்ன?" என்றார் சாப்பாட்டைக்கூட மறந்து ஆத்திரத்துடன்.

"அப்பா நீங்களே நன்கு யோசித்துக்கொள்ளுங்கள். ஏதாவது கெட்டபெயர்வரும்படி—நம் மீதே திருப்பி பழியைச் சுமத்தும்படி—நடந்துவிடாமல்கவனித்துக்கொள்ளுங்கள்"

"அது சரிதானம்மா. இந்த யுத்தம் வந்தாலும் வந்தது, மக்கள் நாணயத்தையே கெடுத்துவிட்டதே. புரட்டும் பித்தலாட்டங்களும்தானே மலிந்துள்ளது. அதுகிடக்கட்டும், இன்று காலை பள்ளிக்கூடம்விடும் நேரத்திற்கு நான் அங்கு வருகிறேன். எதற்கும் உங்கள்மானேஜரைக்கலந்துகொண்டு பின் வேண்டியதைச் செய்வோம்" என்றார்.

இப்படி அவர் கூறியது சாருவிற்கு ஏனோ கலக்கமாக இருந்தது. மானேஜரிடம் கலப்பது என்னவோ அவளுக்கு அவ்வளவு பிடித்தமாகப்படவில்லை. காரணம் மானேஜரின் நடிவடிக்கைகள், ஒழுக்கம்பற்றி பள்ளியில்

நல்ல அபிப்பிராயம் கிடையாது. மேலும் வயதில் குறைந்தவர். 30 அல்லது 35வயதுதான் இருக்கும். பி. ஏ. படித்தவர் என்றாலும் உலக அனுபவம் அதிகம் இல்லாதவர் என்றுதான் கூற வேண்டும்.

அடிக்கடி பள்ளிக்கு வந்து மேற்பார்வையிட்டு, உபாத்தினிகளிடம் சரசமாகப் பழகுகிறார் என்றால், அது, தான்மேற்கொண்டுள்ள பதவியின் காரணமாக பள்ளியின் அபிவிருத்தியில் கண்ணும்கருத்தும்செலுத்தி உழைக்கிறார் என்று கூறிவிடும் அளவில் தோன்றவில்லை. மற்ற ஆசிரியைகளைவிட சாருபிணியிடம் சற்று நெருக்கமாகவே உறவாட விரும்புவதும் அவளுக்குதெரியத்தான் செய்தது. அவரது பார்வை அவள் கண்ணுக்குக் கபடமாகவும் பட்டது. எனவே வயதிலும், அனுபவத்திலும் முதிர்ந்த தன் தகப்பனார், அவரிடம் இவ்விஷயம் குறித்துக் கலந்தால் ஒருசமயம் வேறுவிதமாக முடிந்துவிட்டால்என்னசெய்வது என்பதே அவளது கலக்கத்திற்குக் காரணம். இருந்தாலும் தகப்பனாரிடம் "உங்கள் இஷ்டம்" என்று கூறிவிட்டாள்.

சம்பந்தர் சாருவிடம் கூறியனுப்பியபடி, சரியாக பள்ளிக்கூடம்விடும் நேரத்திற்கு அங்கு சென்றார். இவரை எதிர்பார்த்திருந்த சாருபிணி அவரை மானேஜரின் அறைக்கு அழைத்துச்சென்றாள். மானேஜர் அறையை நெருங்கியவுடன், தன் தகப்பனாரை வெளியில் நிற்கச்சொல்லிவிட்டுத் தான்முதலில்சென்று தன் தகப்பனார் பார்க்கவந்திருக்கும் செய்தியை மானேஜரிடம் கூறி, உத்தரவு வாங்க உள்ளே நுழைந்தாள்.

பயத்துடன், பெரியோர்களைக் காணச் செல்லும் பக்தியுடன், முகத்தில் புன்னகையை வருவித்துக்கொண்டு, இரு கை கூப்பி வணக்கத்தைத் தெரிவித்தபடியே நுழைந்தாள். இவள்வரவையே எதிர்பார்த்தவர்போல் "வா... வா...சாரு." என்றார் வாயிலுள்ள பல்பூராவும் தெரியும்படி சிரித்துக்கொண்டே மானேஜர்.

"என் தகப்பனார் உங்களைக் காண வெளியில் வந்து காத்துக்கொண்டிருக்கிறார். உள்ளே கூட்டி வரலாமா?" என்றாள் அடக்க ஒடுக்கமாக.

இதைக்கேட்டபொழுது அவருடைய முகம் போனபோக்கை வர்ணிக்க வார்த்தைகள் இல்லை என்றுதான் கூறவேண்டும். அப்படிப் பேந்தப்பேந்த திகிலுடன் காட்சியளித்தார். "உன் தகப்பனாரா...எதற்காம்?...கூட்டி வாயேன்" என்று வார்த்தைகள் விழுங்கிவிழுங்கி வந்தன.

மறுநிமிடம் சாரு வெளியே சென்று சம்பந்தரை அழைத்து வந்தாள். அவரும் மரியாதையுடன் வணக்கம் செலுத்திவிட்டு

மானேஜர் எதிரே கிடந்த நாற்காலியில் அமர்ந்தார். மானேஜருக்கு முதலில் பேசவேதோன்றவில்லே. பின் தன்னைச் சமாளித்துக்கொண்டு "என்ன விஷயம்? எங்குவந்தீர்கள்?" என்று கேட்டு வைத்தார். சம்பந்தரும் தாம் வந்த விஷயத்தைக் கூறி, முதல் நாள் சாருவிற்குவந்த கடிதத்தை நீட்டினர்.

அதை வாங்கிப்படித்த மானேஜர் "அதற்கென்ன உங்கள்உசிதம்போல் போலீஸில் தாக்கல் செய்ய வேண்டியதுதான். எதற்கும் இன்றுமாலே சாருவை என் வீட்டிற்கு அனுப்பிவையுங்கள். எனக்குத் தெரிந்த வக்கீலைக் கலந்து அவர் அபிப்பிராயத்தையும் அவளிடம் கூறி அனுப்புகிறேன். பின் எப்படி வேண்டுமோ அப்படிச் செய்துகொள்வோம். வீணுக நீங்கள் வந்து சிரமப்கொள்ள வேண்டாம்" என்று கூறிக்கொண்டே காகிதத்தை மடித்து தன் சட்டைப் பையில் வைக்கச்சென்ருர்.

"இல்லே. அந்தக்கடிதம் என்னிடமே இருக்கட்டும். நீங்கள் வக்கீலிடம் விஷயத்தைக் கூறி விபரம்கேளுங்கள். மாலே சாருவுடன் நானும் வேண்டுமானுல் வருகிறேன். பெண் விஷயம். கேவலம் எதுவும் வந்துவிடக் கூடாது" என்றுகூறி கடிதத்தை வாங்கிக்கொண்டார்.

"காதலில்" நாகேஸ்வரராவ்

"எனக்குத்தெரியாதா என்ன? நீங்கள் அலேயவேண்டாம். நானே என்விஷயம்போல் கவனித்துக்கொள்கிறேன். சாருவே வந்தால் போதும்" என்று கூறி விடைகொடுத்து அனுப்பினர். சாருவும் தகப்பனுருடன் சென்றுவிட்டாள்.

அவர்கள் அறையைவிட்டுச் சென்றவுடன் மானேஜர்முகம் எள்ளும் கொள்ளும் வெடித்ததுபோல் பார்க்கப் பயங்கரமாக மாறியது. கூண்டில் சிக்கிய சிங்கம்போல் அறைக்குள் இங்குமங்கும்உலாவினர்.

(தொடரும்)

★

விபச்சாரியானாள்?

[பழனி அ. தமிழரசு]

இரவு மணி 9 இருக்கும். உள்ளத் தளர்ச்சியுடன் வீட்டினுள்ளே புகுந்தான் உலகநாதன். வீட்டில் விளக்கேற்றப்படாமல் இருள் கவிந்திருந்தது, இன்னமும் அவன் மனைவி தாய்வீட்டிலிருந்து திரும்பி வராததை உணர்த்தியது.

உள்ளேநுழைந்த உலகநாதன் நெருப்புப் பெட்டியைத் தேடியெடுத்து ஒருகுச்சியைக்கிழித்து விளக்கை ஏற்றினான். வீட்டில் ஒளிபரவி இருளை விரட்டியது. வீடுபிரகாசமானதேதவிர அவன் உள்ளம் இருளடைந்துதான் இருந்தது. மன ஆயாசத்துடன் மண்பானையில் இருந்த தண்ணீரில் இரண்டுடம்ளர் பருகினான். மனம் சிறிது நிம்மதியடைந்தாற்போல் பெருமூச்சுஒன்று அவன் வாயிலிருந்து வெளியேறியது.

படுக்கையை விரித்துப் படுத்தான். உள்ளத்தில் நிம்மதி இருந்தால்தானே உறக்கம்வரும்? கடந்த இரண்டுமாத காலமாக தினசரி காலையிலிருந்து மாலைவரை நகர முழுவதும் சுற்றிச்சுழன்று பல இடங்களில் வேலை கேட்டும் கிடைக்கப் பெறாதவனாய் நொந்தஉள்ளத்துடன் வீடு திரும்பும்அவன் எங்ஙனம் உறக்கம்கொள்ள முடியும்? அதிலும் சில நாட்களாக அவனதுமனைவி மரகதத்தின்ஏளனப்பார்வையும், கடுகடுப்பான முகத்தையும் காணும்போது தன்னைப்போன்ற வறுமையாளர்கள் இப்பாழான நாட்டில் வறுமைக்கும் வாழ்க்கைக்கும் இடையில் வருந்திச் சித்திரவதைபபடுவதைவிட சாவதேமேல் என்ற எண்ணத்தைத் தூண்டியது.

"வாழ்க்கை வாழ்வதற்கே" என்ற நன்மொழி அவன்மட்டில் யாரோ ஒரு அநாமதேயத்தின் அர்த்தமற்ற கூச்சல்தான் இது என்றே தோன்றியது. அவன் குடும்ப பாரத்தை நிர்வகிக்கும் பொறுப்பு அவன் கைக்கு வந்தபின்னர் 'வாழ்க்கை வாழ்வதற்கல்ல, வாடுவதற்கே' என்ற புதுமொழிதான் பூத்தது.

இது அவனுடைய குற்றமுமல்ல; ஒருகாலத்தில் அவனது வீட்டாரும் நல்ல செல்வத்தில் புரண்டவர்கள்தான். ஆனால் காலவேகத்தில் அவை அத்தனையும் கரைந்தது.

* * * *

அவன் 20 வயது வாலிபனாய் இருக்கும்போது தாயை இழந்தான். அதனால் அவனையும், அவனது இரு தங்கைகளையும் பராமரிக்கும் பொறுப்பு அவன்

தந்தையின்மேல் வீழ்ந்தது. தாரம் இழந்த துக்கத்தோடு மக்களை வளர்க்கவேண்டிய கடமையும் அவருக்கு ஏற்பட்டுவிட்டதால் இன்னது செய்வதென்று அறியாமல் தவித்தார். இந்த வருத்தத்தால் சில மாதங்களில் அவருக்கு ஏற்கனவே இலேசாக இருந்த காசநோய் அதிகரித்துப் படுத்த படுக்கையாகிவிட்டார்.

இந்நிலைமையில் வீட்டுக் காரியங்களை உலகநாதன் கவனித்து வரவேண்டியதாயிற்று. கல்லூரிப் படிப்பை நிறுத்திவிட்டு ஏதோ ஒரு ஏலச் சீட்டுக் கம்பெனியில் குமஸ்தாவேலை பார்க்க ஆரம்பித்தான். குடும்ப வாழ்க்கையும் ஓரளவிற்கு நல்லவிதமாகநடந்து இரண்டாண்டுகள் கடந்தன.

காலம்தான் எவ்வளவு வேகமாக முன்னேறுகிறது? இந்த இரண்டாண்டுகளில் உலகநாதன் குடும்பத்தில் எத்தனையோ மாறுதல்கள்; அவனுடைய தங்கைகள் இரண்டுபேரும் பூப்பெய்தி வீட்டில் இருந்தார்கள். எவ்வளவோ பணத்தைச் செலவழித்தும் தந்தையின் உடம்பு குணமாகாமல் காலமாகிவிட்டார்.

இப்போதுகுடும்பபாரத்தோடு தங்கைமார்களுக்குத் தகுதியான இடத்தில் திருமணம் செய்து வைக்கவேண்டிய கடமை அவனைச் சார்ந்தது. அவர்களிருவரையும் நல்ல இடங்களில் திருமணம் செய்துவைத்துவிட்டால் தான் நிம்மதியாக வாழலாம் என்ற எண்ணமும், கடமையும் ஒருபுறம் உந்தித் தள்ள, இன்னொருபுறம் மாப்பிள்ளைவீட்டார் கேட்கும் சீர்வரிசையைக்கேட்டு மனங்கலங்கிக்கொண்டிருந்தான்.

தங்கைமார்களை வாழவைக்கக் குடியிருந்தவீட்டை விற்பதைத் தவிர வேறுவழி தோன்றவில்லை அவனுக்கு. அவ்வாறே விற்று அவர்களின் திருமணத்தையும் முடித்துவிட்டான். பின் அவன் தனது அலுவலகத்திற்கு அருகிலேயே ஒரு சிறியவீட்டில் குடிக்கூலிக்கு இருந்தான். மாதத்தில் கிடைத்த முப்பது வெண்பொற் காசுகளை வைத்துக்கொண்டு ஹோட்டலில் உணவருந்தி வாழ்ந்தான்.

இந்தநேரத்தில்தான் மரகதம் அவன் மனதில் குடியேறினாள்; அவன் வசித்துவந்த வீடும் மரகதத்தின் வீடும் ஒரே தெருவில் இருந்தது. தினந்தோறும் மாலை வேளையில் வேலைமுடிந்து உலகநாதன் வீடுநோக்கி வரும்போதெல்லாம் மரகதம் அவளது வீட்டுமுற்றத்தில் இவனது வருகைக்காக காத்திருப்பவள்போலக் காட்சியளிப்பாள். அவனைக் கண்டதும் அவளது இதழ்க்கடையோரத்தில் புன்னகை அரும்பித் தவழும்; மரகதம் ஏழைதான். ஆனால் இயற்கையின் வனப்பில் மிகுந்திருந்தாள்; வீட்டில் அவள், அவளது அன்னை, வறுமையின் வாட்டத்தால் வயது அதிகமாகிய தந்தை ஆகிய மூவர்தான்.

உலகநாதனுக்கும் அவளைக் காணும்போதெல்லாம் உள்ளம் பூரிக்கும்; மரகதத்தை மனைவியாக அடைந்தால் இத்தனைகாலம் அனுபவித்த அல்லல்கள் ஓரளவிற்கு நீங்கியதுபோலாகும் என எண்ணினான். இதை ஒருநாள் அவளின் பெற்றோர்களிடத்தில் கேட்டும்விட்டான்.

அவர்கள் சம்மதத்தின்பேரில் ஆடம்பரம் எதுவுமின்றி மணம் செய்துகொண்டான்மரகதத்தை. இப்போது அவன் மனதில் மகிழ்ச்சியிருந்தாலும் அவனது வருமானம் இரண்டுபேர் வாழ்க்கைக்குக் காணாததாக இருந்தது. ஆனால் மரகதம்சாமர்த்தியசாலி; அவள் வாழ்வின் ஆரம்ப நிலையிலிருந்தே வறுமையின் கோரப் பிடிப்பில் சிக்குண்டு தவித்தவளாதலால் பணத்தின் அருமையை அறிந்தவள். எனவே கணவன் கொண்டுவந்துதரும் அந்தக் குறைந்த ஊதியத்தைக்கொண்டு குடித்தனத்தைச் செட்டாக நடத்திவந்தாள்.

கணவனின் கஷ்டநிலையை நன்குஉணர்ந்தவளாதலால் அவள் சில பணம் படைத்தோர் குடும்பங்களில்வாழும் பாவையர்களைப் போல பவுனையும், பட்டாடையையும், படாடோபத்தையும் விரும்பாதவள். உலகநாதனின் அன்பு மொழிகளிலும், அரவணைப்பிலும்தான் அத்தனை செல்வத்தையும் அடைந்ததாக அகமகிழ்ந்திடுவாள் மரகதம். "நல்லகுடும்பம் ஒரு பல்கலைக் கழகம்" எனக் குறிப்பிட்டாரேபுரட்சிக்கவிஞர், அதற்கொப்ப இருந்தது அவர்களது குடும்பவாழ்க்கை.

இப்படி இரண்டாண்டுகாலம் குடும்பம் நல்லவிதமாக நடந்தேறியது; ஆனால் உலகநாதன் இருந்த சீட்டுக் கம்பெனி திடீரெனதிவாலாகிவிட்டதால் இந்த இரண்டுமாதகாலமாக வருவாய் இன்றி அவர்களின் வாழ்க்கை புயலில்சிக்கியபடகுபோலாயிற்று.

உலகநாதனின் அன்புமொழிகளையும், ஆதரவானபேச்சையும் கேட்டு எத்தனையோ நாட்கள் ஆகிவிட்டது மரகதத்திற்கு. வறுமையான வாழ்க்கையையும், வேலையின்றி வாட்டமுற்றமுகத்துடன் வரும் கணவனையும் காணும்போது அவளின் மனம் வேதனையால் வெந்து கருகியது. இந்த வேதனை வாழ்க்கை நாள

டையில் வெறுப்பாக வளர ஆரம்பித்துவிட்டது. இதனால் சில வேளையில் காரணமில்லாமல் உலகநாதனை உதாசீனப்படுத்திப் பேசவும் ஆரம்பித்துவிட்டாள்.

*   *   *   *

கடந்துபோன இந்த நிகழ்ச்சிகள் ஒவ்வொன்றும் படுக்கையில் படுத்திருந்த உலகநாதனின் உள்ளத்திரையில் நர்த்தனமாடியது. ஏற்கனவே துயரமடைந்த மனம் மேலும் புண்ணாகியது உழைப்பவனுக்கு மதிப்பளிக்காத இந்த நாட்டில் இருப்பதைவிட இறப்பதே மேல என முடிவுசெய்துவிட்டான். உயரே நோக்கினான். உழைப்பாளியினால் உருவாக்கப்பட்ட உத்திரம்கண்ணில்பட்டது. அவ்வளவுதான்; அவன் கண்களில் ஒரு புத்தொளி; கயிற்றை எடுத்துக் கட்டினான்; சாவிலே சாந்தி கண்டுவிட்டான் அவன்.

இப்போது இந்த நாட்டில் சமூகக் கண்களுக்கு மரகதம் ஒரு விதவை. அவள் உலகநாதனைப்போல் கோழையல்ல, வாழ வசதியில்லாததற்காகதூக்கிட்டுக் கொண்டுஇறப்பதற்கு. வறுமை விரட்ட கூலிவேலை செய்தாள். ஆனால் இக்காலத்தில் கூலிவேலை செய்யும் இடங்களில் வேல்விழியாள்களைக் கண்டுவிட்டால்தான் வாலிபப் பட்டாளம் வலைவீசிப் பிடித்து வாகைமாலைசூட போட்டியிடுகிறதே.

அதிலும் மரகதம் விதவை; சொல்ல வேண்டுமா? வழுக்கி விழுந்துவிட்டாள்; ஆரம்பததில் மது அருந்துபவனின் மனம் மருட்சி அடைவது மட்டுமல்ல; அதனால ஏற்படும் அவமானத்தைப்பற்றியும் எண்ணமிடும்; ஆனால் பழக்கப்பட்டுவிட்டால் அவமானத்தைப்பற்றி எண்ணிக் கொண்டா மது அருந்துகிறான்? அதுபோலாகிவிட்டது மரகதத்தின் நிலை.

இன்று முருகபட்டணம் நகரின் மூலைமுடுக்குகளிலெல்லாம் முழக்கமிட்டுத் திகழும் வீணர்களின் விபச்சார விடுதியான "முத்தம்மாள் கம்பெனி"யின் முக்கிய அப்சரஸாக விளங்குகிறாள் மரகதம்.

இன்று அவளை விபச்சாரியாக்கியது பணமா? அல்லது இந்த நாட்டின் சூழ்நிலையா? தீர்ப்புக் கூறுங்கள்.

"மகிழ்ச்சி"
ஆண்டுச் சந்தா (தபாலில்) ரூ. 2—4—0
தனி இதழ் ரூ. 0—3—0
மகிழ்ச்சி இல்லம், விருதுநகர்.

நீதி எங்கே?

— கடவுள் —

"குட்மார்னிங் சார்" என்று சொல்லிக்கொண்டே போலீஸ் ஸ்டேஷனுள் நுழைந்தேன்.

"யார், நீங்களா வாங்கசார்! ஏது ரொம்ப அபூர்வமா இந்தப் பக்கமா? சுகமாய் இருந்தால் வைத்தியர்வீட்டுக்குச் செல்வார் யார்? அவதியில்லாமல் இருந்தால் ஆண்டவனை நினைப்பவர் யார்? அக்கப்போர் இல்லாவிட்டால் இந்த போலீஸ்காரர்களை வேண்டுவார் யார்?" என்றார் சப் இன்ஸ்பெக்டர் சாரங்கன்

"அப்படி ஒன்றும் வேலையை முன்வைத்துக்கொண்டு தங்களிடம் வரவில்லை. இந்தப்பக்கம் காரியமா வந்தேன். உங்க ஞாபகம் வந்தது. அதுதான் அப்படியே பார்த்துப் பேசிவிட்டுப் போகலாம்னு வந்தேன். என் அதிர்ஷ்டம் நீங்களும்இங்கேயே இருக்கிறீர்கள்"

"ஏதாவது விசேடம்உண்டா" என்றார் சப் இன்ஸ்பெக்டர்.

"விசேடங்களை என்னிடம் கேட்கிறீர்களே தினந்தோறும் சாவி கொடுத்து முடுக்கிவிடப் பட்ட யந்திரம்போல நேரத்துக்கு நேரம் ஆபிஸிற்குச் சென்று, பார்த்துப் பார்த்து, படித்துப் படித்து, அலுத்துப்போன 'பைல்' கட்டுகள், கண்டிப்பின்உரைவிடமான ஆபீஸர் முகம், பழகிப் போன கிளார்க்குகள், இவைகளைத் தவிர வேறு விசேடமாக நான் என்னகாணப்போகிறேன். தாங்களாவது நித்தம் நித்தம் புதிய புதிய கேஸ்களைப் பிடிக்கிறீர்கள். ஒரு திருட்டுக் கேஸ், ஒரு நியூசன்ஸ் சார்ஜ், ஒரு கொலைக்கேஸ் இப்படியேகிடைத்துக்கொண்டிருக்கையில் உங்களுக்கு தினந்தோறும் புதிய அநுபவங்கள் கிடைக்கின்றன"

"என்ன புது அநுபவங்கள்! நல்லோர் நாகரீகமானவர்கள் இவர்களின் தொடர்பு என்பதே இல்லாமல் எதை எடுத்தாலும் சந்தேகப்படு, யாரையும் நம்பாதே, அகப்பட்டவைகளை அலசிப்பார்" என்ற போலீஸ் மந்திரங்களின்படிதான் தினந்தோறும் வாழ்க்கை நடத்தவேண்டியதிருக்கிறது. இன்றுகூட ஒரு தற்கொலை கேஸ். பதினெட்டு வயதுபெண், காலேஜ் மாணவி தற்கொலைசெய்துகொண்டாள். அதற்காக இதுவரை வெளியே சென்றிருந்தேன்" என்றார்.

"தற்கொலை என்றாலே பெண்கள்தான் என்று நிச்சயமாகச் சொல்லலாம்போலிருக்கிறது"

"தற்காப்பிற்குமுடியாதவர்கள் தவறியவுடன் தாளுகவே தற்கொலையில் இறங்கிவிடுகிறார்கள். இதைப் படித்துப்பாருங்கள் எல்லாம் புரியும்'' என்று ஒரு காகிதக்கட்டை என்னிடம் கொடுத்தார். அது ஆசிரியர்களின் கற்பனையில்உதயமாகும் கதையல்ல! வாழ்க்கையில் அணுவணுவாக அல்லல்களை அனுபவித்த ஒரு மங்கையின் சோகச் சித்திரம்! இதய ஒலி! துன்ப கீதம்!! அது பின்வருமாறு:

இதை எழுதும் நான் இன்னும்சிறிதுகாலஅளவுதான் இந்த உலகில் உயிரோடு இருப்பேன். சாவின் அணைப்பிலிருந்து இதை நான் ஏன் எழுத வேண்டும்! இறந்தபின் என்னைப்பற்றி,என் வாழ்க்கையைப்பற்றி இந்த உலகத்தார் தெரிந்துகொள்ளட்டும் என்றே எழுதுகிறேன். என்னுடைய சோகக் கதையைக் கேட்டு இனிமேலாவது முன்னேற மார்க்கமின்றித் தவிக்கும் பெண்களின் கதியை மக்கள் உணர்வார்கள் என்று ஒரு நம்பிக்கையுடன்தான்எழுதுகிறேன்!

இவ்வுலகில் தரையுற்ற நாளிலிருந்து இன்பம் என்பதை சிறிதும் அறியாத அபலை நான்! துன்பப்படவே ஜெனித்த ஒரு பெண்! என்னுடைய தாய்முகத்தையோ, தகப்பனுரையோ நான் கண்டதில்லை. என்னுடைய சொந்தஊர் எதுவென்று எனக்கே சரியாகத் தெரியாது. என்னுடைய தாயார் யாரோ ஒரு வாலிபனுடைய பசப்புவார்த்தைகளை நம்பி அவனுடன் வீட்டைவிட்டுக் கிளம்பி பட்டணத்திற்கு வந்து, தன்னுடன் போட்டுவந்திருந்த நகைகளை விற்றுப் பணமாக்கி சிலகாலம் இனிது வாழ்ந்துவந்தாள். பணம் போயிற்று! வாழ்வும் போயிற்று! காதலும் அணைந்தது!! தாய் கருவுற்றாள். குழந்தையோடு குடித்தனமாக வாழ விரும்பாத அவன் புதுப் புது மலர்களை நாடும் வண்டு! காதலி தான் தேவையேதவிர மனைவியல்ல! பிள்ளைப்பேறு கிடைக்கும் தருணம் அம்மாவை ஆஸ்பத்திரியில் சேர்த்துவிட்டு, ஏதோ ஒரு கற்பனை விலாசத்தைக் கொடுத்து மறைந்துவிட்டான். என் துர்அதிர்ஷ்டம் என்னைப் பெற்றுவிட்டுச் சில நாளில் உலகத்தாரிடம் என்னை ஒப்புவித்துவிட்டு இந்த வஞ்சக உலகத்திலிருந்து விடுதலை பெற்றுக்கொண்டாள். துணையின்றி விடப்பட்ட நான் அனாதைஆசிரமத்தில் விடப்பட்டேன்.

அனாதைஆசிரமத்தின் போஷகியான மஞ்சுளா என்னுடைய வரலாற்றைக்கேட்டு என் மீது கருணைகொண்டு தன் வீட்டிற்கு அழைத்துச்சென்றார்கள். என்னைப்போல்வளர்க்கப்பட்டு வாழ்க்கையில் மணமாவதற்கு தயாராக இருந்த மிருதுபாஷிணியும் கூட இருந்தாள். மஞ்சுளாவைவிட மிருதுபாஷிணியிடமே அதிகப்

பற்றுதலாய் இருந்தேன். எந் நேரமும் என்னைத் தூக்கிக் கொண்டும், வேடிக்கைகள் காட்டிக்கொண்டும், கொஞ்சி விளையாடிக்கொண்டும் இருப்பாள். இச்சமயம் மிருதுபாஷிணிக்கும், பெரும் பணக்காரருன ரிச்சர்டு என்பவர்க்கும் கல்யாணம் நடைபெற்றது. படிப்பும், அதற்குரியதாக தற்காலம் மதிக்கும் படாடோபமும் நிறைந்து இருந்தார்.

கல்யாணத்திற்குப்பின் தனிக் குடித்தனம் ஆரம்பமாயிற்று. காபி, ஏலக்காய்த் தோட்டங்கள் உள்ள ஏற்காட்டில் ஒரு பெரிய எஸ்டேட்டின் சொந்தக்காரர். அதன் நடுவேயுள்ள பங்களாவில் தான் குடியிருக்க ஏற்பாடுசெய்திருந்தார். தான் குடியிருக்கப் போகும் இடத்தைப் பார்த்த மிருதுபாஷிணி என்னையும் கூடவே வைத்துக்கொண்டாள். அப்பொழுதுதான் அறியும் பருவத்தைநெருங்கிக்கொண்டிருந்தேன் இருவரையும் என்னுடைய பெற்ரோர்கள்போல்போற்றிவந்தேன். அம்மா ஸ்தானத்தை ஒருவகையில் மிருதுபாஷிணி பூர்த்திசெய்தாள். ஆனல் அப்பா ஸ்தானத்தைச் சிறிதும் அவர் விரும்பவில்லை. நான் கூடஇருப்பதுவே அவருக்கு ஏதோ இடையூருகத் தோன்றியது இது விஷயமாக இருவருக்கும் வாக்குவாதங்கள் கூட நடைபெறும்.

இந்த பெரிய இடத்துப் பிள்ளைகளே பெரும்பாலும் பொய்யர்களாகவும், உலுத்தர்களாகவும் இருப்பார்கள்போலும்! பொய்யும்,வஞ்சகமும்பணத்தின்உடன் பிறப்புகள்போலும்! உதட்டிலே புன்னகை! உள்ளத்திலே வஞ்சகம்!! பேசுவதில் அன்பின் குரல்! செய்கையில் சூழ்ச்சி!! ரிச்சர்டு ஏற்கனவேமணமானவர். தன்னுடைய முதல் மனைவியை மங்களூர்ப் பங்களாவில் விட்டு விட்டு இடையில்கிடைத்த மிருதுபாஷிணியோடு ஏற்காடு எஸ்டேட்டில் குலாவிவந்தார். ஒரு தினம் உண்மை வெளியாயிற்று! வாரத்திற்கு ஒருமுறை காப்பிக் கொட்டை ஏலத்திற்கு மங்களூர் செல்வதாகச் சொல்லி சென்று வந்தார். கார் டிரைவர் மூலம் மிருதுபாஷிணிவிஷயத்தை அறிந்தாள். நேரில் கேட்கத் தைரியமின்றி மனதில் எண்ணி எண்ணி வருந்திக் கொண்டிருந்தாள். கடைசியில் படுக்கும் நிலையை அடைந்தாள். அம்மாவிற்கு ஆகாரவாய் மட்டுமல்ல, வீட்டு வேலைகள் அனைத்தையும் நான்தான்கவனித்துக்கொள்ளவேண்டுமென்று அப்பாவின் கட்டளை பிறந்தது. பள்ளிப்படிப்பு நிறுத்தப்பட்டது. விடியுமுன் எழுந்து பாத்திரங்களை விளக்கி, அப்பாவிற்கு 'பெட் காபி' கொடுத்துவிட்டு, அம்மாவை மருந்து சாப்பிடச் செய்துவிட்டு மற்ற வேலைகளைக் கவனிப்பேன். மணி எட்டு அடித்ததும் காலை டிபன் தயாராய் இருக்கவேண்டும். இல்லையேல், என் உடம்பு தவிடு பொடியாகி

விடும். கஷ்டப்படத்தான் பிறந்தோம் என்று பொறுமையுடன் அனுபவித்துவந்தேன் அடுக்கடுக்காய்சுமத்தப்பட்ட அல்லல்களை! கணவனால் வஞ்சிக்கப்பட்ட மிருதுபாஷிணி, என்னுடைய கஷ்டங்களையும் காணச்சகியாது இந்த உலகிலிருந்து தற்கொலையினால்விடைபெற்றுக்கொண்டாள்.

இது நடந்த சில தினங்களுக்குப் பிறகு ரிச்சர்டைப் பார்க்க ஒரு அன்பர் வந்திருந்தார். அப்பா என்று அவரை நான் கூப்பிடுவதைப் பார்த்த அவர் ரிச்சர்டைப் பார்த்து "என்சார், உங்கள் பெண் பள்ளிக்குச்செல்வதில்லையா?" என்று கேட்டார். "என் குழந்தையாவது ஏதோ ஊர், பெயர் தெரியாத கழுதையை இங்கு வைத்துக்கொண்டு அவஸ்தைப்படுகிறேன் நான்" என்று என்னுடைய பிறப்பின் வரலாறு, அனாதை ஆசிரமத்திலிருந்து வந்தது அனைத்தையும் அவரிடம் சொன்னார். அப்பொழுதுதான் உண்மையை உணர்ந்தேன். அன்னை ஸ்தானத்தை வகித்தமிருதுபாஷிணியேபோனபின் எனக்கு அங்கு என்ன வேலை இருக்கிறது! வேண்டாத இல்லத்தில் இனி இருக்கவேண்டாமென்று எண்ணினேன்! விரும்பாதவரின் வெறுப்பின் சின்னமாக இருக்கவேண்டாமென்று தீர்மானித்தேன். அன்றிரவே அங்கிருந்துகிளம்பினேன் எஸ்டேட் கடைசியில் இருக்கும் பள்ளிக்கூடத்தின் பின்பக்கம் ரயில்வே லைன் இருப்பது ஞாபகம் வரவே அதன்வழியாக நடந்தால் ஏதாவது ஸ்டேஷனை அடையலாமென்று எண்ணிநடந்தேன். கரடு முரடான காடு சூழ்ந்த பாதை என்னை மிகவும் பயமுறுத்தி நிலைகலங்கச் செய்தது. கடைசியில் ரயில்வே லைனுக்குக் குறுக்கே செல்லும் ஒருரோட்டின் முன்வருகையில் ஒரு கார்வேகமாய் வந்து என் முன்னே நின்றது. அதனுள் கிருஸ்தவபாதிரி பெண்கள் இருந்தனர். என்னைப்பற்றி அன்புடன் விசாரித்தார்கள். என்னுடைய கதையைச் சொல்லியாவது மன ஆறுதல் கொள்ளலாமென்று அவர்களிடம் சொன்னேன். என்னை தங்களுடனேயே வைத்துக்கொள்வதாக அழைத்துச் சென்றார்கள். அவர்களைப்போல் பரிசுத்த வாழ்க்கை நடத்த பிரதிக்ஞை செய்துகொண்டேன்! என் வாழ்வில் இனி நல்லகாலம் பிறந்துவிட்டது எனபூரித்தேன்.

கிருஸ்தவபாதிரிப்பெண்களின் ஆதரவால் கலாசாலைப் படிப்பை அங்கு முடித்துக்கொண்டு, கல்லூரிப் படிப்பிற்காக அவர்களுடைய கிளைஸ்தாபனமான இங்கு சென்னையிலுள்ள கல்லூரியில் சேர்ந்து படித்தேன். எல்லாவித செலவுகளையும் அந்தஸ்தாபனத்தார்களேஏற்றுக்கொண்டார்கள். ஒருவித கவலையுமில்லாமல் உல்லாசமாய்கல்விபயின்றுவந்தேன்.

பி. ஏ. பட்டம் வாங்கிவிட்டு எந்த மதஸ்தாபனம் என்வாழ்க்கையில் என்னைக் கைதூக்கிவிட்டதோ அந்த மதமும், ஸ்தாபனமும் தழைத்தோங்கப் பாடுபட வேண்டுமென்று திடசங்கற்பம் செய்துகொண்டேன்.

இந்தச் சந்தர்ப்பத்தில்தான் என்வாழ்வில் துடைக்கமுடியாத அந்தக் களங்கம் உண்டாயிற்று! ஒருதினம் என்னைப்பார்க்க என்னுடைய அப்பா வந்திருப்பதாக சொன்னார்கள். உடம்பெல்லாம் வெடவெடவென்று நடுங்கிற்று. ரிச்சர்டுதான் வந்திருக்கவேண்டுமென்று எண்ணிக்கொண்டு வெளியே வந்தேன். ஆனால் வேறு யாரோ ஒருவர் வந்திருந்தார். எங்கேயோ பார்த்த ஞாபகமாய் தோன்றிற்று. அதன்பின் ஞாபகம் வந்தது. அன்றொரு தினம் ரிச்சர்டைப் பார்க்கவந்த அன்பர் என்று அறிந்தேன். அன்று ரிச்சர்டு சொன்னபிறகுதான் நான் அவருடைய மகள் என்று அறிந்ததாகவும், காலையில் விஷயத்தைவிளக்கி அழைத்துச் செல்லலாமென்று இருக்கையில் நான் அன்றிரவே எங்கேயோ சென்றுவிட்டதாகவும் பின்பு எங்கெல்லாமோ என்னைத் தேடி அலைந்ததாகச்சொன்னார். இங்கு இருப்பதை எப்படித் தெரிந்துகொண்டீர்கள் என்று கேட்டேன். விளையாட்டுப்போட்டியில்முதன்மைப்பரிசுவாங்கிய என்னுடைய படம் பத்திரிகையில்போட்டிருந்

எக்காலத்தும் மாறாதவை

"கோபுர மார்க்"

தீப்பெட்டிகளே!



சைடு மருந்து
தண்ணீருக்குக் கலையாது.
50 டிக்கிரி பாரன் ஹீட்டில்
குச்சிகள் கழிவில்லாமல்
பொருத்தக்கூடியது.

★

The Southern India Match Co.,
SIVAKASI.
Tel:- "SIMCO"

தனைப் பார்த்து வந்ததாகச் சொன்னர். இழந்துவிட்ட பெருஞ் செல்வத்தை அடைந்து விட்டதுபோல் எண்ணினேன் கல்லூரி தலைமை ஆசிரியையிடம் சென்று அவரை அறிமுகம் செய்து அவருடன்கிளம்பினேன். அதன்பின்தான் அறிந்தேன் அவனுடைய வஞ்சக எண்ணத்தை. அப்பா என்ற உரிமையைச் சொல்லி என் கற்பைச் சூறையாடிவிட்டான். இப்பேர்ப்பட்ட காமுகன், வஞ்சகனை எங்கும் காணமுடியாது! புனித வாழ்க்கை நடத்த எண்ணிய என்னுடைய வாழ்க்கை பாழ்படுத்தப் பட்டபின் நான் எப்படி வாழ்வேன்! என்னை ஆதரித்து ஆளாக்கிய அந்த மதஸ்தாபகர்களை எப்படிக்காண்பேன்! படித்துப் பட்டம் வாங்கிப் பயன்? சுயநலக்காரர்களும், சூழ்ச்சிக்காரர்களும் நிரம்பிய உலகத்திலிருந்து நிரந்தர விடுதலை பெருவதைத்தவிர வேறு வழியில்லை.

இன்று நான்இறந்தபின் என்னுடைய பிரேத விசாரணை நடக்கும்! அன்று என்னுடைய அன்னை காமுகன் ஒருவனைநம்பி ஏமாற்றமடைந்து கொல்லப்பட்டாள்! இன்னொரு காமுகனின் அடாதசெயல்களைக் கண்டுசகிக்காத மிருதுபாஷிணி தற்கொலை செய்து இறந்தாள். இறந்தபின் போலீஸ் சோதனை, டாக்டர் சோதனை முடிந்து, பஞ்சாயத்தார்களின்தீர்ப்புப்படி தற்கொலை செய்து இறந்ததாக முடிவுசெய்தார்கள். இந்த முடிவைத்தான் எனக்கும் எழுதப்போகிருர்கள். அன்று ஏன் என் தாய் இறந்தாள்! மிருதுபாஷிணி ஏன் தற்கொலை செய்துகொண்டாள்! இன்று நான்ஏன்தற்கொலைசெய்கிறேன்!! பெண்மக்கள் எந்நாளும் இந்நிலையில்தான் இருக்க வேண்டுமா! இதற்கு இவ்வுலகில்பதில்கிடைக்கப்போவதில்லை! அதோ! சாவு என்னை அழைக்கிறது. மறு உலகில் ஆண்டவனிடத்திலாவது நீதி கிடைக்கும் என்று நம்புகிறேன்.

அபலை, ஹெலிஞ.

படித்த என் உள்ளத்தில் பலவித உணர்ச்சி அலைகள் கிளம்பின. என் உள்ளம் கொதித்தது! வஞ்சனையாளர்களுக்கு தக்கதண்டனை கொடுக்கத் துடித்தது.

“ஏன், சார் இதில்குறிப்பிடும் குற்றவாளிகளைக் கண்டுபிடித்து தண்டனைகொடுக்க முடியாதா?”

“எவர்களை?”

“காதலியைக் கைவிட்டுச் சென்ற கயவனை, மனைவியைப் புறக்கணித்து அவளை தற்கொலை செய்யும்படி செய்த ரிச்சர்டை, தந்தைஎன்று சொல்லி ஏமாற்றி ஒரு பெண்ணைக் கற்பழித்த அந்தக் காமுகனைக் கண்டுபிடித்து தக்க தண்டனை கொடுக்கவேண்டும்”

“கொஞ்சம் பொறுங்கள் சார்! ஏதோ அதைப் படித்துவிட்டு

பாண்டியன். ஏறக்குறைய காளைப் பருவம். எங்களிருவருக்கும் சிறு வயதிலிருந்தே சிநேகமுண்டு. அந்த நாட்கள் இன்னும் என் நினைவை விட்டு நீங்கவில்லை. காலச்சக்கரம் சுழன்றது. நான் வைத்தமல்லிகைச் செடியும் மலர்ந்தது. எங்கள் நட்பு காதலாக அரும்பியது. அப்பாவும் சிலசமயங்களில் இதைக் கண்டித்து மிருக்கிறார். ஆனால் கண்டிப்பிற் கெல்லாம் கட்டுப்பட்டதா காதல்!

ஒருநாள் நான் தண்ணீர்கொண்டு வருவதற்காக குளத்திற்குச் சென்ற சமயம் ஜமீன்தார் உலகநாதரின் கண் என்மேல் பாய்ந்தது. என்னை யே உற்று நோக்கினார். பார்வை பயத்தை உண்டாக்கியது எனக்கு. குடத்தை எடுத்துக்கொண்டு வேக மாக வந்துவிட்டேன். மாதம் ஒன்று கழிந்தது. சமயம் பார்த்தி ருந்தார்போலிருக்கிறது அந்தப் பெரிய மனிதன். என்னுடைய அப்பாவைஅழைத்துவரும்படி ஆட் கள் அனுப்பியிருந்தார். என்னவோ ஏதோ என்று அப்பா ஓடினார். பிறகு அவர் திரும்பி வந்ததும் "அமுதா! உன்னை ஜமீன்தார் கல் யாணம் செய்துகொள்வதாகக் கூறி விட்டார். இனிமேல் நீ ஜமீன்தா ரணி!" இதைப் பெருமையுடன்கூறி னார் அவர். ஆனால் நான்? சிலந்தி வலையில்சிக்கிய ஈப்போல் உடலும் உள்ளமும் துடித்தேன்.

"அவ்வளவுபெரியபட்டம் வேண் டாம்பா! நிச்சயித்துவிட்டீர்களா?"

"ஆமாம். அடுத்தபௌர்ணமிக்கு முகூர்த்தம் வைத்துவிட்டோம்"

"குமரனுடன் வாழ வேண்டிய நான் குறட்டைவிட்டுறங்கும் அவ ருடன் எப்படி வாழ்வேன்! நான் மாட்டேன்" என்று கூறத் துடித் தது என்மனம். கூறியும்விட்டேன். ஆனால் 'முடியாது' என்று ஒரே வார்த்தையில் அடக்கிவிட்டார். கட்டாயக் கல்யாணம் நடந்தது. ஜமீன்தார் வீட்டிற்கு—இல்லை என் கணவர்வீட்டிற்கு வந்துவிட்டேன். ஆனால் அவர்...! என் காதலர்...!

பாண்டியன்:

பூத்துக் குலுங்கும் பூங்கொடி போன்றவள்; இல்லை மானின் மருண்ட விழிகளைத் தனக்கே உரி மையாக்கிக்கொண்டவள். கன்னக்க ரும் வனப்பு! கண்ணாடிக் கன்னங் கள்! கொவ்வைநிற இதழ்கொண்ட அக்கோமளவல்லிக்கு முத்துப் பற் கள்! அவள் இன்பத்தின் உருவம்! இயற்கையின் சித்திரம்! ஆனந்த ஒளி! இப்படிப்பட்டவள் என் உள் ளத்தைப் புண்ணாக்கியதில் வியப் பில்லை. அவள்தான் அழகு மலர் அமுதா. எதிர்வீட்டுப்பெண்.

'ஒண்ணானாலும் ஒண்ணு. நல்ல பொண்ணு' என்று ஊரார் பேசிக் கொண்டனர். பால்குடம் பக்கத் திலிருக்கும்போது—அதுவும் காவ லில்லாமல் இருக்கும்போது—பூனை யால் சும்மாயிருக்கமுடியுமா? நான் அவளைக் காதலித்தேன். ஆனால் முட்டுக்கட்டையிடப்பட்டது! பிரிக் கப்பட்டோம்! யாரால்? பணத்தால் பெருத்த உருவத்தால்! காமத்திற் கும் காதலுக்கும் வேறுபாடு தெரி யாத கசடனால்! அதிகார ஆணவம் பிடித்த அசடனால்! ஆம்! அவன் பணக்காரன். நான் பரம ஏழை. பணப் பிரவாகத்தின்முன் வறுமை அணை என்ன செய்யும்? நான் ஊரி லில்லாத சமயம் எனக்குத் தெரியா மல் திருமணம் நடந்துவிட்டது.

கேள்விப்பட்டேன். ஆனல் என்ன செய்யமுடியும் என்னல்? நாட்கள் நகன்ரேடின. ஒருநாள்......!

அமுதா:

ஆம், ஒருநாள் அவரை—என் காதலரைஅழைத்துவர ஆள் அனுப்பினேன் என்ருல் அது என் குற்றமில்லை. ஜமீன்தார் என்னைத் தாலி கட்டிக்கொண்டதுமூன்ருவதாகும் அவரைக் கண்டாலே எனக்குப் பிடிக்கவில்லை. மறைத்து என்ன சொல்லவேண்டியதிருக்கிறது! எல்லாவற்றையும் அப்படியே சொல்லி விடுகிறேன்!

என் காதலர்—அவர்தான் பாண்டியன்—துள்ளி ஓடும் காளைப்பருவமுடையவர். வசீகர முகம். நடுத்தர உயரம். மாநிறம். இயற்கையின் கட்டுக்கோப்பு அவருடைய உடல். அகன்ற நெற்றி. பரந்த தோள்கள். சிரித்த முகம் அத்துடன் ராஜநடை கொண்டவர். அத்தகைய உருவம் என் உள்ளத்தில் ஓவியமாகப் பதிந்துவிட்டது என்ருல் அதில்ஆச்சரியப்படவேண்டிய அவசியமே இல்லை! ஆனல் இவர்—அதுதான் கயிறு கட்டிய கிழம்—இல்லை என்கணவர், இதற்கு முற்றிலும் விலக்கானவர். சூதும் வாதுமே தொழிலாகக்கொண்டு தளர்ச்சியடைந்த உடல். காலத்திரையால் கோடிட்டுக் காட்டும் நெற்றி. எப்பொழுதும் ஒரே சுடுமூஞ்சி. தூக்குமேடைக்குச் செல்லும் நடை; இருந்தாலும் உடை வெளுப்புதான். அவர் எங்கே? இவர் எங்கே? குயிலும், காகமும் போல்தான்! என் உடலைத் தீண்டினர். நானும் அதைத் தடுக்கவில்லை. என்? நான் அவருடைய மனைவியல்லவா? பலர்முன் என் கைபிடித்தவரல்லவா? ஆனல் என உள்ளமோ காதலரை அடையவே ஒவ்வொரு நிமிஷமும் துடித்துக் கொண்டிருந்தது.

ஒருநாள்! கடலில் புயல் கிளம்பியதுபோல் அடக்கமுடியாதஆசை. காதலரை அடையவேண்டுமென்ற ஒரே உறுதி. பணவசூலுக்காக பக்கத்துகிராமத்திற்குப் போயிருந்தார் ஜமீன்தார். இரகசியமாக வேலைக்காரியை அனுப்பினேன் காதலரை அழைத்துவர. அவரும் வந்தார். ஜமீன்தார் நடத்தி வந்த நாடகத்திற்கு மங்களம் பாடிவிட்டு, ஏறிவிட்டோம் ரயிலில் அன்றிரவே.

உலகநாத ஜமீன்தார்:

மோசக்காரி! பாசாங்குக்காரி! சிரித்துச் சித்திரவதை செய்யும் சொகுசுக்காரி! பலே கைகாரி! நயமாக நடித்து என்னை வஞ்சித்து விட்டாள் கட்டிய கணவனை நானிருக்க, கள்ளக் காதலனேடு காணுமற் சென்றுவிட்டாள். அதுவும் இரவுக்கிரவாக என்ன துணிச்சல்? எவ்வளவு தைரியம்? நல்லவள்தான் என்று கல்யாணம்செய்து கொண்டேன். இப்படி என்மானத்தை வாங்குவாள் என்று யாருக்குத் தெரியும். குப்பையில் கிடந்தவளை கோபுரத்தில் ஏற்றினேன்! மண்ணிலே புரண்டவளை மாளிகையில் வைத்து மகிழ்ந்துவிளையாடினேன்! பிச்சை கேட்டுப் பிழைக்கவேண்டியவளைபிரபுவின்மனைவியாக்கினேன் இப்படிச்செய்துவிட்டாளே! ஏழைக்குடும்பம் என்று வாங்கியிருந்த கடனையும் தள்ளிவிட்டேன். அக்கள்ளியை அடைய வேண்டுமென்ற ஆசையால் 1000ரூபாயும் எண்ணிச்

கொடுத்தேன். அதெல்லாம்போனாலும்போகட்டும், இப்பொழுது என் நகை, நட்டு எல்லாவற்றையுமே அடித்துக்கொண்டு போய்விட்டாளே! அவள்என்ன பெண்ணா? உம்! அவளைச்சொல்லி என்னபயன்! எய்தவனிருக்க அம்பை நோவதா? எல்லாம் அவளுடைய அப்பனிருக்கிறானே, அவனைச் சொல்லவேண்டும். அயோக்கிய ராஸ்கல்! பணத்தை வாங்கிக்கொண்டு மகளைக் கட்டிக்கொடுத்தான் மடையன், கள்ளக்காதலன் கல்யாணமாகுமுன்பே இருக்கும்போது; அது ஏன் இவனுக்குத் தெரிந்திருக்கக் கூடாது? என்னிடம் ஒரு வார்த்தை சொன்னா? சொல்லியிருந்தால் இவ்வளவு தூரம் நடக்குமா? என்பணம்தான் போயிருக்குமா? இல்லை அவளும் தான் போயிருப்பாளா? அவனைப் பழிவாங்காமல்இருப்பேனா? இதோ இன்றைக்கே ஒழித்துவிடுகிறேன் பயலை!

குப்பன்:

கொலைஎன்று கேட்டாலே சிலர் மலைத்துப்போவார்கள். ஆனால் நான்மட்டும் அதைச் செய்ய அஞ்சுவதில்லை. காரணம்கேட்டால்... நானோ ஏழை. பிள்ளைகுட்டிக்காரன். குச்சுவீட்டுக்காரன். என் போன்றோர் பகல் முழுவதும் பாடுபட்டு பசியாலும், பட்டினியாலும், பலனற்ற உழைப்பாலும் பரிதவிக்கிறோம். இரண்டு மூன்று நாள் பட்டினி என்று, வேலையற்றநாளில் மச்சுவீட்டில் வாழும் மகராசர்களை பலமுறை அண்டியபோது அவர்களின் ஆணவப்போக்கு என் கருணை மனதைக் கல்மனமாக்கிவிட்டது. பணத்தைச் சேர்க்க கொள்ளை, கொலை முறையை மேற்கொண்டேன். ஊருக்குப் போக்கிரி. பின் ஜமீன்தாரின் தயவு பிறந்தது. அவரது கையாளானேன். அவர் இட்ட ஆணையைச் சிரமேற்கொண்டேன். பணம்தான் தாராளமாகப் புரளுகிறதே. ஒருநாள் என்னைக் கூப்பிட்டு ரகசியமாக சில விஷயத்தைக் கூறி, கையில் 500 ரூபாயை வைத்தார். பணம் பாதாளமட்டும் பாயுமல்லவா. என் பிச்சுவா முத்துச்சாமியின்இருதயம் வரை பாய்ந்தது. இக்குற்றம் என்னுடையது என்று கூறமுடியுமா? குடும்பத்தை வளர்க்க ஆடுமாடுகளை வெட்டிப் பிழைப்பவரில்லையா?

அமுதா:

இப்பொழுது நான் என் காதலருடன் சென்னையில் இருக்கிறேன். உல்லாசபுரியில் உயிர்க் காதலர்களாகத் திகழ்கிறோம். காதற் கடலில் வாழ்க்கைப்படகை வகையுடன் ஓட்டிச் செல்லுகிறோம். கொண்டுவந்த நகைகளைக்கொண்டு வியாபாரம் செய்து எங்களுக்கும் கொஞ்சம் பணம் சேர்ந்துவிட்டது. வட்டியும் முதலுமாக விரைவில்

ஜமீன்தாருக்குக் கொடுக்கவும் தீர் மானித்துவிட்டோம்.

வாலிபத்தில் வகையுடன் வாழ்ந்து, வயோதிகத்தில் தன் இளங் குமரியின் உள்ளத் துடிப்பை அறியாது கிழவனுக்குப் பலியிட்ட என் தந்தை, என்பொருட்டுப் பலியான தை நினைத்து வருந்தும்போது, என் குறுநகைப் பொக்கைவாயன் "நானிருக்கப் பயமேன்" என்பது போல் தன் மோகனப் புன்னகையால் மாற்றிவிடுகிறான்.

ஒன்று கேள்விப்படுகிறேன். என்னை விபச்சாரி என்று ஊரில் கூறுகிறார்களாம். ஐவருடன் சுகித்த பாஞ்சாலிக்கு பதிவிரதைப்பட்டம்; இந்திரனுடன சல்லாபித்த அகலிகைக்குப் பதிவிரதாப்பட்டம்; சந்திரனுடன் சரசம் செய்த தாரகைக்குப் பதிவிரதாப்பட்டம்; அவர்களை விட என்போன்றார் எந்தவகையிலே தாழ்ந்தவர்கள் என்று புராண இதிகாசபக்தர்களைக் கேட்கிறேன். என் உண்மைக் காதலர் பாண்டியனுக்கு நான் துரோகம் செய்யப் போவதில்லை. நீங்கள் என்னநினைப் பீர்களோ அதுபற்றிக்கவலையில்லை. சூழ்நிலையே மனிதரில் சிலரைக் குற்றவாளி ஆக்குகிறது! சமுதாய நிலையே கள்ளனை, காமுகனை, கொலைகாரனை, குடியனை, எத்தனை, பித்தனை, விபச்சாரியை, பிச்சைக்காரனை உண்டாக்குகிறது இதை நன்கு மனதில் பதியவைத்துக் கொள்ளுங்கள். இப்பொழுது கூறுங்கள் உங்கள் மனச்சாட்சிக்கு விரோதமின்றி 'என் செய்கை சரியா?' என்று. ★

சத்திய வேதமாகிய பைபிளை ஆழ்ந்து படிக்க வேத மாணுக்கர் ஐக்கிய சங்கத்தாரால் தமிழில் வெளியிடப்பட்டிருக்கும் வேதோபதேசவினாவிடை என்ற புஸ்தகம் கிடைக்கும்.

விலை: சாதா பைண்டிங் ரூ. 0—12—0

அட்டைப் பைண்டிங் ரூ. 0—14—0

தபால் சார்ஜ் வேறு

"எட்வர்ட் காபி ஓர்க்ஸ்"

காளியம்மன் கோவில் தெரு, விருதுநகர்.

திரைப்பட விமர்சனம்

பரணியின் காதல்

தன்மகள் லதாவின் (ஜூனியர் ஸ்ரீரஞ்சினி) பிறந்த நாள் கொண்டாட்டத்திற்காக ஏற்பாடு செய்திருந்த நாடகத்தைப் பார்த்துக்கொண்டிருக்க சுந்தரராவ் (துரைஸ்வாமி) அதிகமாகச்சிரித்ததால் ஏற்பட்ட மார்பு வலியின் சிகிச்சைக்காக, டாக்டர் அபிப்பிராயப்படி, ஒரு மலையடிவாரக் கிராமத்திற்கு தன் தமக்கை மகன் ராஜா (நாகேஸ்வரராவ்) வுடன் சென்று பங்களாவில் தங்குகிறார்.

காட்டிற்குள் வேட்டைக்குச் சென்றஇடத்தில், அங்கு விறகு வெட்ட வந்திருந்த வெள்ளை வுள்ளம் படைத்த மோதி (பானுமதி) என்ற அழகு அணங்கைக் கண்டு, கனிமொழி பேசுகிறான் ராஜா. காதல் மலர்கிறது இருவரிடையேயும். 'பட்டணத்து வாசிகள் பகட்டுக்காரர்கள். காரியமாகுமட்டும் கனிவாகப் பேசி, நம்பினவர்களை நட்டாற்றில்விட்டுச் செல்லும் நயவஞ்சகர்கள். எனவே அவனை மறந்துவிடு' என்று மோதியின்தோழி சிமிலி (சூரியகாந்தம்) எச்சரிக்கிறாள் மோதியை.

மோதியின் வனப்பில் வயப்பட்ட பக்கத்துக் கிராமத்து முரடன் பரசுராமன் (முக்கமாலா) மோதியை எப்படியும் அடைய தீர்மானிக்கிறான். இந்நிலையில் எதிர்பாராதபடி இரவோடு இரவாக ராஜா, மோதியிடம்கூட சொல்லிக்கொள்ள நேரமின்றி மாமனாருடன் பட்டணம் செல்கிறான். அங்கு லதாவைக் கல்யாணம் செய்துகொள்ள மறுத்து மீண்டும் மோதியைத் தேடிவருகிறான்.

பணத்தாசைகொண்ட மோதியின் பெற்றோர், பரசுராம் மூவாயிரம் ரூபாய் கொடுப்பதாகச் சொன்னதை நம்பி, அவனுக்கு மணம் செய்விக்க பலவந்தமாக மோதியை இழுத்துக்கொண்டு

அவன் கிராமம் செல்கிறார்கள். சிமிலிமூலம் விஷயத்தைக் கேள்விப்பட்ட ராஜா மனமுடைந்து பட்டணம் திரும்புகிறான். கல்யாணத்திற்கு முன்பே கெடுக்க எத்தனித்த முரடனிடமிருந்து தப்பித்து ராஜாவைத் தேடி பட்டணம் வருகிறாள் மோதி. பலநாள் கஷ்டத்திற்குப்பின் ஒருநாள் ராஜாவை லதாவுடன் காரில் கண்டபொழுது திடுக்கிட்டு, தன்னைக் கைவிட்டதை எண்ணி சித்தம் கலங்கி ரோட்டில் செல்லுகையில் கார்மோதி விபத்திற்குள்ளாகிறாள். தெருப்பாடகன் சிவஸ்வாமி (வி எஸ்.ஆர்.) அவளைத் தன்குடிசைக்குக் கொண்டு சென்று காப்பாற்றுகிறான்.

குணமடைந்தபின் அவளும் அவனுடன் பாடிப் பிழைக்கச் செல்லுகிறாள். தப்பிவந்தவளைத் தேடிவந்த முரடன் கண்டுவிடுகிறான். கைகலப்பில் பரசுராம் போலீஸால் கைதியாக்கப்படுகிறான். பாடகன் காலை இழக்கிறான். நாடகக்கம்பெனி ராவுஜி (ரேலங்கி)யும், அவர் அஸிஸ்டண்(சிவராவ்)டும், மோதியின் குரல் இனிமையைக் கேட்டு நாடகக் கம்பெனியில் சேர்த்துக் கொள்ளுகிறார்கள்.

நாடகம் பார்க்கவந்த ராஜா, மோதியைக் கண்டு விடுகிறான். லதாவை மணப்பதை அடியோடு வெறுக்கிறான். லதா மோதியைச் சந்தித்து தன்நிலையை உணர்த்துகிறாள். இரக்கப்பட்ட மோதி ஊரைவிட்டே கிளம்பி தன்கிராமம் செல்லுகிறாள். ராஜாவும் அவளைத் தொடர்கிறான். இருவரும் சந்திக்கிறார்கள். "உண்மையாகவே தன் மீது காதல் இருக்குமானால், பட்டணம் சென்று லதாவை மணந்து வாழ வேண்டும்" என்று மோதிகூறிக் கொண்டிருக்கும்போது, சிறையிலிருந்துவெளிவந்து, இவர்களைத் துரத்திக்கொண்டே வந்த பரசுராம் ராஜாவைநோக்கி கத்தியை வீசுகிறான். இடையே பாய்ந்த மோதியின்மீது பாய்கிறது அது. அவள் சுதந்திரபுரியை அடைகிறாள். இதே நேரம் முரடனைத் துரத்திவந்தசிமிலி, கைக்கோடரியால் அவன்உயிரைவாங்குகிறாள் மோதியின் சமாதிமீது ராஜா—லதா தம்பதிகள் புஷ்பாஞ்சலி செய்கிறார்கள்.

இதுதான்திரைக்கதை. இதை எழுதியவர் நடிகை திருமதி பி. பானுமதி படத்தை டைரக்ட் செய்தவர் பானுவின் கணவர் திரு. ராமகிருஷ்ணா. இவர்களது "பரணிபிக்சர்ஸ், சென்னை 17" தான் புரடியூஸர்ஸ். படத்தின் பூர்ண உரிமையாளர்கள் ஜி. பி. பிலிம்ஸ், பொறையார். ஸ்டுடியோ: வாஹினி. வசனம்: உதயகுமார். பாடல்கள்: கே.டி. சந்தானம். ஒளிப்பதிவு: கமால் கோஷ். ஒலிப்பதிவு: ஏ. கிருஷ்ணன் பி. ஏ. எடிட்டிங்: வி. எஸ். நாராயண். செட்டிங்ஸ்: குப்புசாமி. சங்கீத டைரக்ஷன்: சி. ஆர். சுப்பராமன்.

நடிப்பு: மோதியாக நடிக்கும் பானுமதி பிரமாதமாக நடித்துள்ளார். ஆரம்பமுதல் கடைசிவரை கன கச்சிதமாக அமைந்துள்ளது அவரது பாகங்கள் பூராவும். காதல், சோகம், களிப்பு ஒவ்வொன்றையும் அவர் முகபாவனையிலும், செய்கையிலும் உணர்த்தும்முறை ஏ. 1. அவர் 'வெடிகட், வெடிகட்' என்று துள்ளிக் குதித்தோடும் தோரணையும், விறகுக்கட்டுடன் வரும்போது சந்தித்த ராஜாவுடன் கிண்டல் பேசுவதும், பிரிந்தராஜாவை மீண்டும் சேரும் பொழுது வாஞ்சையுடன் ஓடி அவன்காலைப்பற்றி விசும்புவதும் வெகுஜோராக அமைந்துள்ளது.

நாகேஸ்வரராவ் சுமாராகவே நடிக்கிறார். முக்கமாலாவிற்குப் போதிய சந்தர்ப்பம் கொடுக்கப் படவில்லை. மற்றவர்கள் வந்து போகிறார்கள். ரேலங்கியும், சிவராவும் காமிக் என்ற பெயரில் நடத்தும் கூத்துகள் அசம்பாவிதமாகவும், அதேநேரம் கதையின் டெம்போவைக் குறைத்து மந்தமாக்கியும் உள்ளன.

ஒளிப்பதிவில் சிலஇடங்களில் கவனக்குறைவு உள்ளன. மோதி முரடனின் குடிசையில் அடைக்கப்பட்டுள்ள இடத்தில் விளக்கு ஆடுகிறது. ஆனால் அவள்மீது படும் ஒளி நிலையாக நிற்கிறது. ஒலிப்பதிவு சிலஇடங்களில் பேசுவது என்ன என்று புரிந்து கொள்ளமுடியாதபடி இருக்கின்றன. செட்டிங்ஸ் கவர்ச்சிகரமாக அமைந்துள்ளது. பலபாடல்கள் கேட்க இனிமையாக இருக்கின்றன. பர்ஸாத், ரத்தன்போன்ற ஹிந்திப் படங்களின் கூட்டுச் சரக்காக, ஏழையின் காதல் சாகவேதான் முடியுமென்ற கருத்துடன் கதை அமைந்துள்ளது.

மலைமங்கையுடையில் காட்சியளிக்கும் பானுமதியின் சுவரொட்டிப் படங்களையும், கதையின்பெயரையும் பார்த்துவிட்டு, என்னமோ ஏதோஎன்று பெண்களும் பிறரும் மலைக்காது, தாராளமாக, பானுவின் அனாயாசமான நடிப்பைக் காண அவசியம் பார்க்கவேண்டியபடமே 'காதல்'

ரூ. 150 இனம்!

பரிசுகளுடன் கூடிய 300தினுசு தீப்பெட்டி லேபில்கள் அடங்கிய செட்களை விற்பனை செய்ய எல்லா ஊர்களிலும் ஏஜண்டுகள் தேவை. விபரங்களுக்கு எழுதுங்கள்.

டெயிலி காலண்டர் சப்ளையிங் பீரோ,

சிவகாசி (S. I.)

சினிமாச் செய்திகள்

'பெல்''

பொய்மான் காடு

ஹாஸ்ய நடிகர் டி. ஆர். ராமச்சந்திரன், கல்கியின் உதவியுடன் ஜெயந்தி புரொடக்ஷன் ஆரம்ப விழாவைத் தடபுடலாக நடத்தி, தமது முதல் தயாரிப்பான கல்கி எழுதிய ''பொய்மான் காடு'' படப்பிடிப்பு வாஹினி ஸ்டுடியோவில் நடைபெற்று வருகிறது. இதில் டி. ஆர். ராமச்சந்திரன், அஞ்சலி தேவி நடிக்கின்றனர்.

புதுவாழ்வு

பாகவதரின் சொந்தப் படமான ''புதுவாழ்வு'' முக்கால்பாகம் முடிவடைந்துவிட்டது. இதில் பாகவதருக்கு இழந்த பெயரை மீண்டும் எடுக்க நிறையச் சந்தர்ப்பங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இது ஒரு சமூகப் படமாதலால் பாகவதருக்கு புதுமாதிரியான மேக்கப் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதில் பாகவதருடன் லலிதா, மாதுரி தேவி, ஆழ்வார் குப்புசாமி முதலியோர் நடிக்கின்றனர்

அன்பு

சிட்டாடல் புரடக்ஷன்ஸுடன் கூட்டாளியாக இருந்த திரு நடேசன், தனியே வந்து தமது சொந்தத்தில் 'நடேசன் புரடக்ஷன்' என்று ஆரம்பித்து, ''அன்பு'' என்ற படமெடுக்கத்திட்டமிட்டிருக்கிறார்.

மருமகள்

லேனாவின் கிருஷ்ணா பிக்சர்ஸ், நாலாவது தயாரிப்பான 'மருமகள்' தீபாவளிக்குத்திரையிடப்படவேண்டுமென்றநோக்கத்துடன் வேலைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன இதில் பத்மினியும், என். டி. ராமராவும் பிரதானபாகம் தாங்கி நடிக்கிறார்கள். நரசிம்மபாரதி டாக்டராக வந்து சக்கைபோடு போட்டிருக்கிறாராம்.

ஜமீந்தார்

ஜூபிடர், சங்கீதாபிக்சர்ஸ் கூட்டுத் தயாரிப்பான ஜமீந்தார் முடிவடைந்துவிட்டது. இதில் மாதுரி தேவி, ராஜம்மா, டி பாலசுப்பிரமணியம் எஸ். ஏ நடராஜன் நடித்திருக்கின்றனர். படம் ''மந்திரிகுமாரி''யளவு இருக்கலாமென்று எதிர்பார்க்கப்படுகிறது. வரட்டும் பார்த்துவிடுவோம்.

கல்யாணம்பண்ணிப்பார்

விஜயா புரடக்ஷன்ஸாரின் 'கல்யாணம்பண்ணிப்பார்' தெலுங்குத் தயாரிப்பு ஆந்திராவில் 100வது நாள் கொண்டாப்பட்டு வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருக்கிறது. இதன் தமிழ் தயாரிப்பு ஆகஸ்டு முதல் வாரத்தில் திரையிடப்படுகிறது. இதில் என். டி. ராமராவும், ஜி. வரலக்ஷிமியும் நடித்திருக்கின்றனர்.

ஆடி

தமிழ்ப்பட ரசிகர்களுக்கு

ஞாபக சோதனைப் போட்டி 4

[கட்டணம் கிடையாது]

முழுவதும்
சரியான விடைக்கு
பரிசு ரூ. 10

ஒன்றுக்கு மேற்பட்டவர் சரியான விடை எழுதி அனுப்பினால் பரிசுத் தொகை சமமாகப் பிரித்துக்கொடுக்கப்படும்

வெற்றி பெற்றவர்கள் ஜாபிதாவும் சரியான விடையும் அடுத்த இதழில் பிரசுரிக்கப்படும்

1	ம — மா —
2	— — — ஸ்
3	— — ஹ — —
4	— — — பூமி
5	பக்த — —
6	— ன — ஜ — — ஜா —
7	— — — குமார்
8	த — ம — — —
9	— — ன — — — ரம்
10	க — — — ம்

பெயர்...

விலாசம்...

ஊர்................................. ஜில்லா.................................

போட்டி நிபந்தனைகள்

1 கட்டத்திலுள்ள கோடிட்ட இடங்களைப் பூர்த்திசெய்தால் இதுவரை வெளிவந்துள்ள தமிழ்ப் படங்களின் பெயர்கள் வரும்.

2 மேற்கண்ட கூப்பனை மையினால் பூர்த்தி செய்து, கவரில் வைத்து, "ஆசிரியர், ஞாபக சோதனைப் போட்டி, மகிழ்ச்சி இல்லம், விருதுநகர்" என்று எழுதி 31—7—52க்குள் அனுப்பப்பட வேண்டும். உள்ளூர் வாசிகள் நேரில் கொண்டுவந்து கொடுக்கலாம்.

3 முதல் கூப்பன் அச்சுக் கூப்பனிலும், அதன்பின் தனித் தாளிலும், எத்தனை கூப்பன்கள் வேண்டுமானாலும் ஒருவர் எழுதியனுப்பலாம். ஆனால் 100 கூப்பன்களுக்கு ஒரு அச்சுக்கூப்பன் வீதம் எழுதப்படவேண்டும்.

4 தனித்தாளில் எழுதப்படும் கூப்பன்கள், தாளின் ஒரே பக்கத்தில் தெளிவாக, தனித்தனியாக கூப்பன் வரிசை எண் போட்டு எழுதப்படவேண்டும்.

5 பூர்ணமாக பூர்த்திசெய்யப்பட்ட கூப்பன்களை மட்டுமே கவனிக்கப்படும்.

6 கூப்பன்கள் தபாலில் பத்திரமாக வந்து சேராமல், வழியில் தவறும் கூப்பன்களுக்கு நாங்கள் ஜவாப்தாரியல்ல.

7 இப்போட்டி சம்பந்தமாக யாதொரு கடிதப் போக்குவரத்தும் வைத்துக்கொள்ளப்பட மாட்டாது.

8 எவருமே சரியான விடை அனுப்பாவிடில், போட்டி ஆசிரியரின் தீர்ப்புப்படி பரிசுத் தொகை பிரித்துக்கொடுக்கப்படும்.

9 மேற்கண்ட நிபந்தனைகளுக்குக் கட்டுப்பட்டுத்தான் நேயர்கள் இப்போட்டியில் கலந்துகொள்ளவேண்டும்.

ஞாபக சோதனைப் போட்டி 3 முடிவு

சரியான விடை

1 ஜலஜா
2 சீமந்தனி
3 பத்ம ஜோதி
4 சைரந்திரி
5 என் மனைவி
6 பக்த துருவன்
7 பாக்யதாரா
8 மாயாவதி
9 சூரியபுத்திரி
10 ரம்பையின் காதல்

இப்போட்டிக்கு எவருமே சரியான விடை அனுப்பவில்லை. எனவே போட்டி ஆசிரியரின் தீர்ப்புப்படி கீழ்க்கண்டவர்களுக்கு பரிசுத்தொகை ரூ. 10-4-0ம் பிரித்துக்கொடுக்கப்பெற்றிருக்கிறது.

முதற் பரிசு (2 தப்புள்ள விடை) ரூ. 8—தலைக்கு ரூ. 2 வீதம்

1 P. T. G. மாரியப்பன்,
7/42 சுலோச்சன நாடார் தெரு, விருதுநகர்.

2 A. ராஜலெட்சுமி, c/o ராஜன் பதிப்பகம்,
5, லெக்ஷிமிபுரம் 2வது தெரு, மதுரை.

3 M. கிருஷ்ணம்மாள்,
A. V. A. காம்பவுண்டு, ராஜபாளையம்.

4 ச. இஞ்ஞாசிமுத்து,
9/36, ஆர். ஸி. வடக்குத் தெரு, சாத்தூர்.

2வது பரிசு (3 தப்புள்ள விடை) ரூ. **2—4—0**

1 N. சண்முகம்,
29, சின்னையா பள்ளிக்கூடத் தெரு, விருதுநகர்.

2 S. S. மணியன், சிருகனூர் P. O.
(Via) T. V கோவில். (திருச்சி ஜில்லா)

3 S. மகாலிங்கம், c/o P. S. ரத்தினசாமி நாடார்,
எண்ணெக்கடை, முனிசிபல் ஆபீஸ்ரோடு, விருதுநகர்.

4 P. அசோகன், மானேஜர், ராஜன் பப்ளிஸிட்டி,
44, லக்ஷிமிபுரம், 6வது தெரு, மதுரை.

5 K. ஸ்டாலின், 23, உள்தெரு, விருதுநகர்.

6 A. கன்னையன், c/o லக்ஷ்மி டாக்கீஸ், ஆரணி N. A.

7 V. முத்துப்பாண்டியன், c/o
ஸ்ரீ ஸ்ரீனிவாச மோட்டார் சர்வீஸ், விருதுநகர்.

8 ஹெக்டர் A. சாம்சன்,
222, தெற்குராஜ வீதி, தூத்துக்குடி.

9 R. அசோகன், 41, பண்டார தெரு, விருதுநகர்.

மேற்கண்ட 2வது பரிசு பெற்ற 9 பேர்களுக்கும், மகிழ்ச்சி ஆசிரியர் நா. சதானந்தம் எழுதிய "15 நிமிடங்கள்" என்ற புத்தகம் அனுப்பப்பட்டிருக்கிறது.

திருமண அழைப்புப் பத்திரிகைகள்

அழகான பலவர்ண சித்திரங்களுடன் லித்தோவில் அச்சிட்டது. பல தினுசு, அனேக சைஸ்களில் சப்ளை செய்கிறோம். சாம்பிள் வேண்டுவோர் தபால் செலவிற்காக எட்டணு அனுப்பிப் பெறுக்கொள்ளலாம்.

கார்னேஷன் லித்தோ ஒர்க்ஸ்,

தபால் பெட்டி நெ. 2. சிவகாசி (S. I.)

செந்தமிழ் நாட்டுச் சிறுவர்களுக்கு
திடகாத்திரமளிக்கும்
சிறந்த உணவு எங்கள்

ராஜா பார்லி பிஸ்கட்
ராஜா குளுகோ பிஸ்கட்
ராஜா ஜிஞ்சர்நட் பிஸ்கட்

ஸ்தாபிதம்: 1926

ASP தயாரிப்பு

ராஜா பிஸ்கட் கம்பெனி,

115, திண்டுக்கல் ரோடு, மதுரை.

உரிமையாளர்: ஆ. சங்குபிள்ளை.

கிளை: 2, டவுன்ஹால் ரோடு, காலேஜ் ஹவுஸ்,

L. V. ஷண்முகம் பிள்ளை மதுரை.

CONNEMARA PUBLIC LIBRARY

உணர்ச்சியூட்டும் கருத்து நிறைந்த
கதைகள்.

'மகிழ்ச்சி' ஆசிரியர்
நா. சதானந்தம் எழுதியது.

விதியா? 0—8—0
(இரண்டாம் பதிப்பு)

★

மனப்புயல் 0—8—0

★

15 நிமிடங்கள் 0—4—0

★

ஆ. கந்தசாமி எழுதியது
காமமும் காதலும் 0—8—0

★

'ஜீவா' எழுதியது
"சபலம்" 0—12—0

★

மாதிரிப் பிரதி வேண்டுவோர் ஒவ்வொரு
புத்தகத்திற்கும் அதன் விலையுடன்
0—0—9 ஸ்டாம்ப் அதிகமாக
அனுப்பவும்.

V. P. P. கிடையாது.

ஏதாவது மூன்று புத்தகங்கள்
வாங்குகிறவர்களுக்கு தபால் செலவு
இனம்.

விற்பனையாளர்களுக்கு 25% கழிவு.
முன்பணமாக அனுப்புக.

மகிழ்ச்சி இல்லம்,
விருதுநகர்.

ஆசிரியரும், அச்சிட்டு வெளியிடுபவரும் நா. சதானந்தம்,
சதானந்தா அச்சகம், விருதுநகர்.

ஸ்ரீ மாப்பிள்ளை விநாயகர்

சோடா, கிரஷ்
பானங்களே

சிறந்தவை

மதுரை, திண்டுக்கல் & மணப்பாரை